
நகரத்தார் குரல்

(சமூக, இலக்கிய மாத இதழ்)



காவி உடையுடுத்திக் காலையிலும் மாலையிலும்
நாவாரப் பேர்சொல்லி நாற்பதுநாள் நோன்பிருந்தோம்.
தேவருக்கும் எட்டாத் திருவடியில் நெஞ்சமெனும்
பூவடுத்துச் சூட்டுகிறோம் புண்ணியனே வாராயோ?

டிசம்பர் 1989

பத்தாவது ஆண்டு நினைவாஞ்சலி



தோற்றம் : 29-12-1924

மறைவு : 26-12-1979

திரு. இராமசாமி செட்டியார் அவர்கள்

முன்னாள் நிர்வாக இயக்குனர் : ஸ்ரீ விசாலம் சிட் பண்ட் லிமிடெட்
முன்னாள் இயக்குநர் : தி நெல்லை ஃபைனான்ஸ் (பி) லிமிடெட்
முன்னாள் இயக்குநர் : அருணா கெமிக்கல்ஸ் & பார்ம்ஸ் (பி) லிமிடெட்
முன்னாள் உரிமையாளர் : ஸ்ரீவிசாலம் ஃபைனான்சியர்ஸ்
முன்னாள் நிர்வாக உரிமையாளர்: ஸ்ரீ கோகுலம் பண்ணை
முன்னாள் அறங்காவலர் : ஸ்ரீ விசாலம் அறக்கட்டளை

"ஈரய்ந்தாண்டானது எமைப்பிரிந் தென்றாலும்
சீரோடு நீ வாழ்கிறாய் எம்நெஞ்சில் - இறையே
இராமசாமி பெயரோய் இந்நாளில் உந்தன்
திருவடி வைத்தோம் அஞ்சலி."

என்றும் தங்கள் நினைவை மறவாத

மகன் : ராம. அருணாசலம், மருமகள்,
மகள்கள், மருமகன்கள், பேரக் குழந்தைகள்
மற்றும் மேற்கண்ட நிறுவனங்களின் அலுவலர்கள்.

உ
சிவமயம்

நகரத்தார் குரல்

(சமூக, இலக்கிய மாத இதழ்)

குரல் 8
ஒலி 11

சுக்ல
கார்த்திகை

டிசம்பர்
1989

மோகாபி மானமின்னும் முற்றும் மறக்கவில்லை;
தேகாபி மானம் சிதையவில்லை; - ஏகோ
உனையடைந்தும் பாசம் ஒழியவில்லை; கூடல்
தனையடைந்த சொக்கநா தா.

— குருஞானசம்பந்தர்

ஆசிரியர்:
வி. என். சிதம்பரம் செட்டியார்

வெளியிடுபவர்:
சுப. அ. நடராசன் செட்டியார்

துணை ஆசிரியர்:
எல். சுந்தரம்

அலுவலகம்:
25, வடக்குச் சித்திரை வீதி,
மதுரை-625 001

தொலைபேசி: p. p. 26668

தனி இதழ் ரூ. 2-00 ஆண்டுச் சந்தா ரூ. 24-00

நாடாளுமன்றத் தேர்தலில் ப. சிதம்பரம் அமோக வெற்றி!

அண்மையில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் சிவகங்கைத் தொகுதியிலிருந்து காங்கிரஸ்கட்சி சார்பில் போட்டியிட்ட மத்திய இணை அமைச்சர் திரு. ப. சிதம்பரம், தம்மை அடுத்து வந்த தி.மு.க. வேட்பாளர் திரு. ஏ. கணேசனைக் காட்டிலும் 2,19,552 வாக்குகள் அதிகம் பெற்று அமோக வெற்றி பெற்றுள்ளார். திரு. ப. சிதம்பரம் பெற்ற வாக்குகள் 4,30,290 ஆகும்.



திரு. ப. சிதம்பரம் கண்டனூரைச் சேர்ந்தவர். இவரது தந்தையார் லெ. சித. பழ. பழநியப்ப செட்டியார் அவர்கள். இவரது தாயார் திருமதி லெட்சுமி ஆச்சி அவர்கள், ராஜா சர் மு. அண்ணாமலைச்செட்டியார் அவர்களது புதல்வி ஆவார்கள்.

திரு. ப. சிதம்பரம் 16-9-1945ல் பிறந்தவர். இவர் சென்னை மாநிலக் கல்லூரியில் படித்து B.Sc பட்டமும் சென்னை சட்டக் கல்லூரியில் படித்து B. L. பட்டமும் அமெரிக்காவில் ஹார்வேர்டு பல்கலைக்கழகத்தில் படித்து M. B. A. பட்டமும் பெற்றவர். 1973-1976 வரை தமிழ்நாடு இளைஞர் காங்கிரஸ் தலைவராக இருந்தவர். 1977ல்அகில இந்திய இளைஞர் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஆனார். 1984ல் சிவகங்கைத் தொகுதியிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்டு 1985ல் அகில இந்தியக் காங்கிரஸின் இணைச் செயலாளராக நியமிக்கப் பட்டார். பின் துணை அமைச்சராகவும் இணை அமைச்சராகவும் பதவி வகித்தார்.

திரு. சிதம்பரம் திரு. ராஜீவ் காந்தியின் நெருங்கிய நண்பராவார். இவர் நாடாளுமன்ற உறுப்பினராவதற்கு முன்பு சென்னை உயர்நீதி மன்றத்திலும் டில்லி இந்தியத் தலைமை நீதி மன்றத்திலும் வழக்கறிஞராகப் பணியாற்றினார். 1977ல் திருமதி இந்திராகாந்தி கைது செய்யப் பட்டதை எதிர்த்துப் போராடி சிறை சென்றார்.

திருநெல்வேலி சங்கம்

திருநெல்வேலி நகரத்தார் சங்கத்தின் பொதுக் குழுக் கூட்டம் 27-8-89 அன்று நடைபெற்றபோது திரு. எஸ்பி. இராமசாமி தலைவராகவும் திரு. கே ஆர். சிதம்பரம் துணைத் தலைவராகவும் திரு. சி. கல்யாண கிருஷ்ணன் செயலாளராகவும் திரு. ஆர்எம். பழநியப்பன் துணைச் செயலாளராகவும் திரு. என். மோகனசுந்தரம் பொருளாளராகவும் மற்றும் பத்துப் பேர் செயற் குழு உறுப்பினர்களாகவும் தேர்வு செய்யப் பெற்றனர்.

திருவாளர்கள் எஸ்எம். நடராஜன் செட்டியார், கை. திருநாவுக்கரசு செட்டியார் எஸ். கனகசபை செட்டியார், வி. சண்முகம் செட்டியார், பிஎல். முருகப்பன் ஆகிய ஐவர் கௌரவ ஆலோசகர்களாகத் தேர்வு செய்யப் பெற்றனர்.

ப. சிதம்பரம் வெற்றிக்குப் பாராட்டு

மத்திய அமைச்சர் திரு. ப. சிதம்பரம் அவர்கள் சிவகங்கை நாடாளுமன்றத் தொகுதியில் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றதைப் பாராட்டுவதாயும் இவர் கண்டனூர் லெ. சித. லெ. குடும்பத்தில் பிறந்தவரெனவும் செட்டிநாட்டரசர் அண்ணாமலையாரின் பேரன் எனவும் இவரது வெற்றி நாட்டுக்கோட்டை நகரத்தார் சமூகத்திற்குப் பெருமையைத் தந்துள்ளது எனவும் கண்டவராயன்பட்டி திரு. நா. அருணாசலன் தெரிவித்துள்ளார்.

உங்களுக்குத் தெரியுமா?

நம் நாட்டில் இன்று பிரபலமாக இருக்கும் பல பயிர்கள் வெளிநாடுகளிலிருந்து நம் நாட்டுக்கு வந்தவை ஆகும்.


ஃ கம்பும் சோளமும் ஆப்பிரிக்காவில் இருந்து வந்தவை.

ஃ திராட்சை மொகலாயர்களால் ஆப்கானிஸ்தானத்திலிருந்து கொண்டுவரப் பட்டது.

ஃ புகையிலை, வேர்க்கடலை, உருளைக்கிழங்கு, அன்னாசி ஆகியவை போர்ச்சுக்கீசியர்களால் அறிமுகப்படுத்தப்பட்டவை.

ஃ ஸ்பெயினிலிருந்து தக்காளியும், சீனாவிலிருந்து தேயிலையும், ஐரோப்பாவிலிருந்து முட்டைக்கோஸ், காலி ஃபிளவரும் வந்தன.

— வி. ஆர். சின்ன அருணாசலம்,
தேவகோட்டை.



பிள்ளையார்பட்டியில் 3-10-89 அன்று நிகழ்ந்த 60ஆம் ஆண்டு நிறைவு மணி விழாவில் முனைவர் சுப. அண்ணாமலை அவர்கள் தம் துணைவியார் திருமதி மீனாட்சி ஆச்சி அவர்களுக்கு மாலை அணிவிக்கிறார்கள். அருகே டாக்டர் கே. பிச்சைக் குருக்கள்.

நகரத்தார் பக்தி நெறிமன்ற ஆண்டு விழாவும் திருவிளக்குப் பூஜையும்

மதுரை நகரத்தார் பக்தி நெறி மன்றத்தின் சார்பில் மதுரை ராஜா முத்தையா மன்றத்தில் 1-1-1990 திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு மன்றத்தின் முதலாம் ஆண்டு நிறைவு விழாவும் அதையொட்டி திருவிளக்குப் பூஜையும் நிகழவிருக்கிறது. திருவிளக்குப் பூஜையில் கலந்து கொள்ள விருப்பமுள்ளவர்கள் 15-12-89க்குள் நகர விடுதி அலுவலகத்தில் தங்களது பெயரை முன்னதாகப் பதிவு செய்து கொள்ள வேண்டும் என்றும், அதற்குக் கட்டணத் தொகையாகக் குறைந்த பட்சம் ரூ. 5-00ம் விருப்பத்திற்கேற்பக் கூடுதலாகவும் செலுத்தலாம் என்றும் நகரத்தார் பக்தி நெறி மன்றத்தின் தலைவர் டாக்டர் திரு. எஸ். சண்முகம் செட்டியார் அவர்கள் கேட்டுக் கொள்கிறார்கள்.

பழம் நீ கவியரங்கம்

சென்ற ஆண்டுகளைப் போல -வே இந்த ஆண்டும் பழம் நீ பதிப்பகத்தின் சார்பாக 7-1-90 ஞாயிறன்று மாலை 6 மணி அளவில் மதுரை வடக்கு ஆடி வீதியில் உள்ள திருவள்ளுவர் கழகத்தில் தமிழாகரர் முனைவர் திரு. சுப. அண்ணாமலை அவர்கள் தலைமையில் கவியரங்கம் நிகழவிருக்கிறது.

அதனையொட்டி 6-1-90 சனிக்கிழமை மாலை 5 மணி அளவில் வடக்குச் சித்திரை வீதியில் உள்ள நகர விடுதியில் கூட்டு வழிபாடு நடைபெறும் எனவும் அனைவரும் இரு நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறும் அமைப்பாளர் திரு. லெ. மு. மு. முத்துமாணிக்கம் கேட்டுக் கொண்டுள்ளார்.

எனது வெளிநாட்டு அனுபவங்கள்



வி.என்.சிதம்பரம்

— 47 —

என்னுடைய அம்மான் மாப்பிள்ளை, நச்சாந்துபட்டி பெ. ந. பெ. குடும்பத்தைச் சேர்ந்த சுப. கிருஷ்ணப்ப செட்டியார் அவர்கள் மிகச் சிறந்த பேட்மின்டன் விளையாட்டு வீரர். பிள்ளையார்பட்டி கோவிலைச் சேர்ந்தவர்கள். சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்பு தமிழகத்தில் - குறிப்பாக செட்டிநாட்டில் பேட்மின்டன் டோர்னமெண்டுகள் நிறைய நடைபெறும் தமிழகத்தில் பல விளையாட்டு வீரர்கள் இருந்தாலும் அதற்கு இணையான விளையாட்டு வீரர்களாக நகரத்தார்களில் நச்சாந்துபட்டி கிருஷ்ணப்ப செட்டியார், காரைக்குடி ஏஆர். ஏஆர். அருணாசலம் செட்டியார், வலையபட்டி பெரியணன் செட்டியார், ராங்கியம் நா. வ. லெ. லெட்சுமணன் செட்டியார், கடியாபட்டி உலகப்பன் சுப்பையா, கீழச்சிவல்பட்டி மெய்யப்ப செட்டியார், அரண்மனை சிறுவயல் நடராஜன்




கனடா நாட்டில் மாண்ட்ரியல் நகரில் வியப்பூட்டும் ஒலிம்பிக் ஸ்டேடியத்தில் வி. என். சிடி. அவர்கள்.

செட்டியார், குருவிக்கொண்டான்பட்டி அ. சொ. தே. மாணிக்கம் செட்டியார் இன்னும் பலர் திகழ்ந்தனர். ஊருக்கு ஊர் பந்தயங்கள் நடைபெறும். அப்படி நடைபெறுகின்றபோது அந்தந்த ஊரிலிருந்து மாட்டு வண்டிகளிலும், கார்களிலும் விளையாட்டு வீரர்களை ஊக்குவிப்பதற்காகச் செல்வார்கள். இப்போது பொதுத் தேர்தல்களில் காணப்படும். பரபரப்பு அப்போது பந்தயங்களில் காணப்படும். அதில் பல பந்தயங்களில் கிருஷ்ணப்ப செட்டியார் வெற்றி பெற்று வெற்றிக் கோப்பைகளைப் பெற்றிருக்கிறார்கள். இவர்களுக்கு பார்ட்னராக பிரபல விளையாட்டு வீரர்களான சந்தானசாமி, அப்துல்வகாப், நடராஜன் செட்டியார், லெட்சுமணன் செட்டியார், மாணிக்கம் செட்டியார் முதலியவர்கள் விளையாடி வெற்றி பெற்றிருக்கிறார்கள். அவர்கள் விளையாடுகிற போது எதிரி சிறப்பாக விளையாடினால் கை தட்டுவார்கள். அம்பேயர் தனக்குச் சாதகமாகச் சொன்னாலும் எதிரிக்குக் கிடைக்க வேண்டிய பாய்ண்டாக இருந்தால் எதிரிக்கே அந்த பாய்ண்டைக் கொடுக்கச் சொல்லி உண்மையான விளையாட்டு வீரராக கிருஷ்ணப்ப செட்டியார் திகழ்ந்தார்கள். பேட்மின்டனில் அவர்கள் பெற்ற வெற்றி நகரத்தார்களுக்குப் பெருமை. அவர்கள் இறுதிப் போட்டியில் கலந்து கொண்டு விளையாடும்போது அதைக் காண்பதற்கு ஆயிரக்கணக்கில் ரசிகர்கள் கூடுவார்கள். அவர்கள் விளையாட்டைப் பார்த்துவிட்டு, நாங்களும் பேட்மின்டன் விளையாடக் கற்றுக் கொண்டோம். எங்களைப் போன்ற சிறுவர்கள் எல்லாம் பெரிய விளையாட்டு வீரர்களுக்குப் பந்துகளை எடுத்துப் போடுவோம்.

கிருஷ்ணப்ப செட்டியாருக்கு மூன்று மகள்களும், ஒரு மகனும் இருக்கிறார்கள். மகன் பெயர் ரெகுபதிசுப்பிரமணியம். காரைக்குடி அழகப்பா கல்லூரியில் இஞ்சினீயரிங் படித்துவிட்டு சொந்த முயற்சியில் கனடா நாட்டிற்கு வேலைக்குச் சென்றார். அங்கு அரசாங்கத்தில் மாண்ட்ரியல் என்ற நகரத்தில் இஞ்சினியராகப் பணியாற்றினார். நான் சிக்காக்கோ வந்திருப்பது அறிந்து கனடாவிலிருந்து என்னைப் பல முறை தொலைபேசியில் அழைத்து கனடாவிற்கு தன்னுடைய வீட்டிற்கு வரவேண்டுமென்று அன்புக் கட்டளையிட்டார். அவரது அன்பு வேண்டுகோளுக்கிணங்க சிக்காக்கோவிலிருந்து விமானம் மூலம் மாண்ட்ரியலுக்குச் சென்றேன்.

மாண்ட்ரியல் இமிகிரேசனில் அவர்கள் நடந்து கொண்ட விதம் எனக்கு மிக ஆச்சரியமாக இருந்தது. இமிகிரேஷனில் என்ன வருமானம், யார் அழைப்பின் பேரில் வந்திருக்கிறீர்கள் என்று என்னைக் கேட்டார்கள். விவரங்களைச் சொல்லி இரண்டு வாரம் விசா கேட்டேன். எல்லா நாட்டிலும் நாம் கேட்பதை விட விசா குறைத்துத்தான் கொடுப்பார்கள். ஆனால் கனடாவில், ''எங்கள் நாட்டைச் சுற்றி பார்க்க இரண்டு வாரம் போதாது'' என்று சிரித்துக் கொண்டே இமிகிரேஷன் ஆபிசர் மூன்று மாதம் விசா கொடுத்தார்.

விமான நிலையத்திற்கு ரெகுபதி வந்து என்னை அழைத்துக் கொண்டு அவரது இல்லத்திற்குச் சென்றார். அச்சமயம் அவரது மனைவி இந்தியாவிற்கு வந்து விட்டார்கள். குழந்தைகள் மட்டும் வீட்டில் இருந்தார்கள். ரெகுபதி மிக அடக்கமானவர். மிக எளிமையானவர். அதிகம் பேச மாட்டார். சப்தமில்லாமல் சிரிப்பார். குறிப்பறிந்து காரியமாற்றுவதில் வல்லவர். ஆடம்பரத்தைவிட உபசரிப்பில் பாசமிருக்கும். உறவினர்களுக்கு உதவுவார். அவர் மகன் கிருஷ்ணப்ப



பொன். புதுப்பட்டி மு. சே. சுப. சுப்பையா செட்டியார் அவர்கள் (செயலாளர், சிங்கப்பூர் நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் அறப்பணிக் கழகம்) புதல்வன் செல்வன் அண்ணாமலைக்கும் நெற்குப்பை முரு. பழ. மு. வி. முத்துக்கருப்பன் செட்டியார் அவர்கள் புதல்வி செல்வி அலமேலுவுக்கும் நெற்குப்பையில் 15-11-89 அன்று திருமணம் சிறப்பாக நடைபெற்றது. படத்தில் மணமக்களுடன் காரைக்குடி ராம. வீர. ராம. இராமசாமிச் செட்டியார் அவர்களும் மணமகனின் தந்தையும் உள்ளனர்.

னும் ஐயாவைப் போல விளையாட்டு வீரனாகத் திகழ்கிறான்.

கனடா மிக அழகான நாடு. ஒரு காலத்தில் கனடா ஆங்கிலேயர் ஆதிக்கத்தில் இருந்தாலும், காமன்வெல்த்தில் இருப்பதாலும், இந்தியர்கள் விசா வாங்காமல் அங்கு செல்லவும், இருக்கவும் முடிந்தது. அதைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு இந்தியர்கள் குறிப்பாக-பஞ்சாப்காரர்கள் தினசரி தனி விமானம் மூலம் அங்கு சென்றதனால் அங்கு குடியேற கட்டுப்பாடு வைத்து விட்டார்கள். கனடா 150 ஆண்டுகளுக்குள் உருவானதால் அதற்குப் பழம் பெருமை கிடையாது. எல்லாம் நாகரிகமாக அமெரிக்காபோல் உள்ளது. ஆனால் அமெரிக்காவைவிட அங்கு குளிர் அதிகம்; நீக்ரோக்கள். குறைவு அவ்வளவு பெரிய நாட்டில் மக்கள் தொகை குறைவு. மாண்ட்ரியல் மிக அழகான, அமைதியான நகரம். 12 ஆண்டுகளுக்கு முன்பு அங்கு ஒலிம்பிக் விளையாட்டு நடந்ததால், ஒலிம்பிக் நடப்பதற்காக மாண்ட்ரியலுக்கு அருகே ஒரு ஊரை உருவாக்கி அதில் மக்கள் குடியேறினார்கள். அது இப்போது மிகச் சிறந்த ஊராகக் காட்சியளிக்கிறது. மிக அழகான சர்ச்சும், மிகப் பெரிய பார்க்கும் அங்கு உள்ளன. சர்ச்சில் திருமணத்தையும், பார்க்கில் விருந்தையும் வைத்துக்கொள்கிறார்கள். ஒரு வாரம் மாண்ட்ரியலைச் சுற்றிப்பார்த்து விட்டு ரெகுபதியிடம் விடை பெற்றுக் கொண்டு மீண்டும் சிக்காக்கோ வந்து சேர்ந்தேன். தற்போது ரெகுபதி சிங்கப்பூர் பல்கலைக்கழகத்தில் பணியாற்றி வருகிறார். மற்றபடி கனடாவில் அதிகம் நகரத்தார்கள் இல்லை.

(வளரும்)

வாழ்த்துகிறோம்!

படத்தில் காணும் திரு. ப. அருணாசலம், 26 வயது இளைஞர். இவர் அலவாக்கோட்டை சி. அரு. சித. அரு. பத்மனாபன் செட்டியார் - திருமதி மீனாட்சி ஆச்சியின் புதல்வராவார். மாத்தூர் கோவில் உறையூர் பிரிவைச் சேர்ந்தவர்.

இவர் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் B. E. (Electronics & Instrumentation) பயின்று 1986ல் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றார். பின்னர் திருச்சி ரீஜினல் பொறியியற் கல்லூரியில் M. B. A. பயின்று



முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றார். பின்னர் சென்னை இன்ட்செம் எலெக்ட்ரானிக்ஸ் நிறுவனத்தில் Materials Engineer ஆக 9 மாதங்கள் பணியாற்றினார்.

இவர், அமெரிக்க நாட்டில் நியூயார்க் நகரத்தில் உள்ள நியூ ஜெர்ஸி இன்ஸ்ட்டிடியூட் ஆஃப் டெக்னாலஜியில் M S. (Computer Science) பயில 28-8-89 அன்று சென்னையிலிருந்து புறப்பட்டுச் சென்று அங்கு கல்வி பயின்று வருகிறார்.

இவரது தந்தையார் திரு. அரு. பத்மனாபன் செட்டியார் இங்கிலாந்து நாட்டில் உள்ள மான்செஸ்டர் பல்கலைக் கழகத்தில் M. Sc. (Technology) (நெசவுத் தொழிலில் மேற்படிப்பு) படித்தவர். இப்போது கோவையிலுள்ள தென்னிந்திய ஜவுளி ஆராய்ச்சிக் கழகத்தில் விஞ்ஞானியாகவும் ஆய்வுக் கூடத் தலைவராகவும் பணியாற்றி வருகிறார்.

கந்தர் சஷ்டி விழா

கம்பம் நகரத்தார் சங்கத்தின் சார்பில் கம்பம் காசி விஸ்வநாதர் கோயிலில் கந்தர் சஷ்டி விழா, ஒரு வாரம் கொண்டாடப்பட்டது.

அவ்வமயம் 30-10-89 முதல் 5-11-89 முடிய ஒரு வாரம் ''பெரிய புராணம்'' பற்றி 'காசிஸ்ரீ' திரு. அரு. சோமசுந்தரன் தொடர் சொற்பொழிவு ஆற்றினார்.

5-11-89 அன்று நிகழ்ந்த பட்டாபிஷேக நிகழ்ச்சியில் திரு. அரு. சோமசுந்தரனுக்கு நகரத்தார் சங்கத்தின் சார்பில் திரு. அ. ராமனாதன் செட்டியார் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தார். சங்கச் செயலர் எல். கேபி. எல். சுப்பையா நன்றி கூறினார்.

ஆஞ்சநேயர் ஜெயந்தி விழா

காரைக்குடியை அடுத்துள்ள உ. சிறுவயல் தேனாற்றங்கரையிலுள்ள ஆஞ்சநேயர் கோவிலில் நடைபெற இருக்கும் ஆஞ்சநேயர் ஜெயந்தி விழாவின் 4வது ஆண்டுக் கூட்டம் தலைமைப் புரவலர் திரு ராம. அழகப்பச் செட்டியாரின் இல்லத்தில் நடைபெற்றது. அது சமயம் விழாக் குழுவினர் அனைவரும் கலந்து கொண்டார்கள்.

4வது ஆண்டு ஆஞ்சநேயர் ஜெயந்தி விழாவை வரும் 27-12-89 புதன்கிழமை அன்று கொண்டாடுவது என்று தீர்மானிக்கப்பட்டது.

எஸ்பி. முத்துராமனுடன் ஒரு பேட்டி

ஆடம்பரமான இன்றைய திரை உலகில் அடக்கமான ஒரு இயக்குநர் இருக்கிறுர் என்ருல் அவர் நம் திரு. எஸ்பி. முத்துராமனைத் தவிர வேறு யாராக இருக்க முடியும்?

'கலைமாமணி' திரு. எஸ்பி. முத்துராமன் அன்பானவர்; அடக்கமானவர்; பழகுவதற்கு இனியவர்; சிறுவர்களுக்கும் மரியாதை கொடுப்பவர். குணத்தில் தங்கம்.

50 ஆண்டுகள் அரசியல் வாழ்க்கை வாழ்ந்தவரும் பெரியார் ஈ.வெ.ரா. விடம் அதிக ஈடுபாடு கொண்டவருமான பெருமைக்குரிய காரைக்குடி இராம. சுப்பையா அவர்களது மூத்த புதல்வர்தான் நமது திரு. எஸ்பி. முத்துராமன் என்பது நாடறிந்த செய்தி.

திரு. முத்துராமன் 1949 முதல் 1953 வரை தேவகோட்டை தே பிரித்தோ உயர் நிலைப் பள்ளியில் பயின்றவர். அங்கு மாணவர் தலைவராகச் செயலாற்றியவர். இவர் 1955ல் ஏவி. எம். ஸ்டுடியோவில் படத் தொகுப்புத் துறையில் சேர்ந்து பணியாற்றினுர். 1960ல் உதவி இயக்குநரானுர். இவருடைய குரு இயக்குநர் ஏ. சி. திருலோக சந்தர் ஆவார். திரு. முத்து



'கலைமாமணி' எஸ்பி. முத்துராமன் அவர்கள்.

ராமன் கிருஷ்ணன்-பஞ்சு, ஏ. பீம்சிங், டி. பிரகாஷ்ராவ், கிருஷ்ணன்நாயர், எஸ். ஆர். புட்டண்ணு ஆகிய இயக்குநர்களின் கீழ்-''களத்தூர் கண்ணம்மா'' முதல் 50 படங்களுக்கு உதவி இயக்குனராகப் பணியாற்றியுள்ளார்.

கனிமுத்துப் பாப்பா

திரு. முத்துராமன் 1973ல் இயக்குநரானார். இவர் இயக்கிய முதல் படம் ''கனிமுத்துப்-பாப்பா'' ஆகும். இவரை இயக்குநராக அறிமுகப்படுத்திய பெருமை வி. சி. குகநாதனைச் சேரும். அடுத்தது ''பெத்த மனம் பித்து'' என்பதாகும். இவர் இதுவரை - அதாவது ''ராஜா சின்ன ரோஜா'' வரை-63 படங்களை இயக்கியிருக்கிறார். (இவற்றில் ஒன்று தெலுங்கு; ஒன்று கன்னடம்)

இவர் இயக்கியுள்ள படங்களில் அதிகமானவை ரஜினிகாந்த் நடித்துள்ள படங்கள் ஆகும். (எண்ணிக்கை: 23.)

வெற்றிப் படங்கள்

திரு. முத்துராமன் இயக்கியுள்ள படங்களில் 25 படங்கள் 100 நாட்களுக்கு மேல் ஓடியுள்ளன. 4 படங்கள் 25 வாரங்களுக்கு மேல் ஓடி சாதனை படைத்துள்ளன. (அவை: சகலகலா வல்லவன், தூங்காதே தம்பி தூங்காதே, நல்லவனுக்கு நல்லவன், மனிதன் - இவை அனைத்தும் ஏவி. எம். மின் தயாரிப்பு ஆகும்.)

பெருமைக்குரிய-புகழுக்குரிய அண்ணன் எஸ்பி. முத்துராமன் அவர்களை 1973 முதலே நான் அறிவேன். பெரிய இயக்குநராக இருந்தும் சிறிது கூடக் கர்வமோ, படாடோபமோ இல்லாதவர். பணம், புகழ், செல்வாக்கு இருந்தும் அன்று போலவே இன்றும் பழகுகிறார். சுருக்கமாகச் சொல்லப் போனால் தன்னடக்கத்திற்கு மறு பெயர் 'முத்துராமன்' என்பது.

அப்படிப்பட்ட குணக் குன்றை 20-10-89 அன்று சென்னையில் ஏவி. எம். ஸ்டுடியோவில் சந்தித்து நேர்முகம் கண்டேன். அப்போது அவர் ஆர்வமுடன் பேட்டியளித்தார்.

பேட்டியைத் தொடருங்கள்:-

''உங்களது தன்னடகத்திற்கும் பெருமைக்கும் என்ன காரணம்?''

''நான் தேவகோட்டையில் பயின்ற பள்ளி ஒரு காரணம். அடுத்தது என்னை வளர்த்த ஏவி. எம். ஸ்டுடியோ. ஏவி. எம். ஸ்டுடியோ சினிமாத் தொழிலில் ஒரு பல்கலைக் கழகம். இங்கு ஏவி. எம். மெய்யப்ப செட்டியார் அவர்களின் நேரடியான நிர்வாகத்தில் நான் தொழில் நுட்பங்களை நன்கு கற்றுக் கொண்டேன். ஏவி. எம். ஸ்டுடியோ எனக்குத் தாய் வீடு மாதிரி. இங்கு தொழில் கற்றுக் கொண்டது தான் என் சிறப்புக்களுக்குக் காரணம்.''


''நீங்கள் கதைக்கு ஏற்ற வாறு நட்சத்திரங்களைத் தேர்வு செய்வீர்களா அல்லது நட்சத்திரங்களுக்கு ஏற்றவாறு கதையைத் தேர்வு செய்வீர்களா?''

''திரை உலகில் இரண்டும் உண்டு. இப்படித்தான் செய்ய வேண்டுமென்ற கட்டாயம் ஏதும் இல்லை.''

திரைத் தொழில்

''திரைத் தொழிலைப் பற்றிய தங்கள் கருத்து என்ன?''

திரைப்படம் நல்ல மீடியா. இது வேகமாக மக்களிடையே சேர்கிறது. மக்கள் தொடர்புடைய துறை. திட்டமிட்டு ஒழுங்காகச் செய்தால் நஷ்டம் ஏற்படுவதைத் தவிர்க்க முடியும்.



"மிஸ்டர் பாரத்" படப்பிடிப்பில் ரஜினிகாந்த் இயக்குநர் எஸ்பி. முத்துராமன், சத்யராஜ்.

சினிமா பரபரப்பாக ஆகிவிட்டதால் ஒரு சூதாட்டச் சூழ்நிலை உருவாகிவிட்டது. படம் தயாரிப்பதற்கு முன்பே என்ன செலவு செய்யப் போகிறோம்; என்ன வரவு வரும் என்று கணக்கிட்டு ஒழுங்கு முறையுடன் செயல் பட்டால் இந்தத் தொழிலும் சிறந்த தொழிலாக வளரும்.''

''நீங்கள் முன்பு போல் புது முகங்களை அதிகமாக அறிமுகப் படுத்தாதது ஏன்?''

''முழுவதும் புதுமுகங்களாக அறிமுகப்படுத்தினால் அந்தப் படம் வியாபார ரீதியாக வெற்றி பெறுவதில்லை என்பதுதான் அதற்குக் காரணம்.''

''சொந்தமாகப் படம் தயாரிக்கும் எண்ணம் எதுவும் உங்களுக்கு இருக்கிறதா?''

''அந்த மாதிரி எண்ணமெல்லாம் இல்லை''

தொலைக் காட்சி

''தொலைக்காட்சியால் திரைப் படங்கள் பாதிக்கப்பட்டுள்ளனவா?''

''விஞ்ஞான வளர்ச்சியில் தொலைக்காட்சியை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். வந்திருச்சு, வந்திருச்சு என்று பயப்படாமல் அதை எதிர்த்து நிற்கவும் பயன்படுத்திக் கொள்ளவும் வேண்டும். பாதிப்பு என்று சொல்வதற்கில்லை.''

''தொலைக்காட்சிப் படங்களைக் கூட நீங்கள் இயக்குகிறீர்கள் போலிருக்கிறதே..?''

''ஆமாம். சிவசங்கரியின் கதை அமைப்புடைய ''ஒரு மனிதனின் கதை''யைப் படமாக்கினோம். அது 13 வாரங்கள் ஒளி பரப்பப்பட்டது. குடியின் கெடுதலை விளக்கும் அப்படத்தில் ரகுவரன் முக்கிய பாத்திரத்தில் நடித்தார். அடுத்து சிவசங்கரியின் ''நேற்றைய மனிதர்கள்''ளைப் படமாக்கினோம். அதுவும் 13 வாரங்கள் ஒளிபரப்பப்பட்டது. ஜெய்சங்கர், தேவிலலிதா நடித்த அது, கணவன் இல்லாமல் தனிப்பட்ட பெண்ணாலே வாழ்ந்து காட்ட முடியும் என்பதைச் சித்தரிக்கிறது. தொலைக்காட்சிக்காக

ஆண்டுக்கு ஒருபடம் இயக்கு வேன். நல்ல கருத்துக்களை எடுத் துச் சொல்லவும் ஆத்ம திருப்திக் காகவும் அதைச் செய்வதாக இருக்கிறேன்''

''நீங்கள் இந்திப் பட உலகில் காலடி எடுத்து வைக்காத காரணம் என்ன?''

''இந்திப் படங்களை இயக்க வாய்ப்புகள் வருகின்றன. இருக் கிற தமிழ்ப்படங்களுக்கு இடையூறு ஏற்படாத வண்ணம் பார்த் துக் கொள்ள வேண்டியிருக்கிறது. எனவே தயங்கிக் கொண்டிருக் கிறோம்?''

நகரத்தார் இளைஞர்கள்

''நகரத்தார் இளைஞர்களுக்குத் தங்களது ஆலோசனை என்ன?''

''நகரத்தார் இளைஞர்கள் முன்பு வங்கி, அலுவலகம் என கௌரவமான வேலைகளை மட்டு-மே செய்தனர். இப்போது சென்னையில் பாடி, அம்பத்தூர், திருவொற்றியூர் போன்ற பகுதி களில் உள்ள தொழிற்சாலைகளில் கீழ் மட்டத்திலிருந்து மேல் மட் டம் வரை எல்லா வேலைகளையும் பார்த்து வருகின்றனர். இது வரவேற்கக்கூடியது. கேவலம் கருதாத எந்த வேலையையும் பார்க்க அவர்கள் தயாராக இருப் பது நல்லது. 'நாங்கள் அப்படி இருந்தோம் இப்படி இருந்தோம்' எனப் பழம் பெருமை பேசாமல், சீட்டுப் போட்டுப் பொழுதைக் கழிக்காமல் கிடைத்த வேலையைக் கேவலம் கருதாமல் பார்த்து வருவது நல்லதுதான். நான் செல்லுமிடங்களில் அவர்களது நாணயம், உழைப்பு பற்றி நல்ல அபிப்பிராயம் நிலவுவதைக் கேள்விப்படுகிறேன். இது பெரு-மை தருகிறது.''

நகரத்தார் குரல்

''நகரத்தார் குரல்'' பற்றித் தங்கள் கருத்து என்ன?''

''நகரத்தார் குரல்' நல்ல முறையில் குரல் கொடுக்கிறது. எல்லாச் செய்திகளையும் விரி வாகத் தருகிறது. செட்டி நாட்ட வர்களின் பெருமையை வெளி உலகிற்குத் தெரியப்படுத்து கிறது. இதைச் சேர்த்து வைத் தால் இக்கால நகரத்தார்க ளுடைய சரித்திரம் பின்னல் தெரியவரும். நகரத்தார் இளை ஞர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும் வகையில் வேலைகள் காலியாக உள்ள தகவல்களையும் படித்துவிட்டு வேலையில்லாதிருக் கும் இளைஞர்களின் விவரங்களை யும் வெளியிட்டு உதவலாம். சிறு

அனைவருக்கும் எமது
நல்வாழ்த்துக்கள்!

சுந்தரம்
சோப் ஒர்க்ஸ்

15, அனுப்பானடி
வாய்க்கால் தெரு

(பழைய குயவர்பாளையம்
ரோடு)

மதுரை-625 009

போன்: 25998





''குரு-சிஷ்யன்'' படப்பிடிப்பில் பஞ்சு அருணாசலம், இயக்குநர் எஸ்பி. முத்துராமன், பிரபு, ரஜினிகாந்த்.

சிறு தொழில்கள் தொடங்குவதற்கான வழிமுறைகளை, தொழில் அனுபவமிக்கவர்களிடம் பெற்று ஒவ்வொரு இதழிலும் வெளியிட்டால் இளைஞர்களுக்கு அவை உதவியாக இருக்கும். இதுஎனது வேண்டுகோள்.''

திரு. எஸ்பி. முத்துராமன் இப்போது ''குரு சிஷ்யன்'' (தெலுங்கு) லெட்சுமி புரொடக்ஷன்ஸ் படம், விஜயகாந்த் நடிக்கும் படம் போன்றவற்றை இயக்கி வருகிறார்.

''உங்களது எதிர்காலத் திட்டம் என்ன?'' என்று கேட்டபோது ''திரை உலகத்தை நானும் விடமாட்டேன்; அது என்னையும் விடாது'' என்று சிரித்தவாறே கூறினார்.

திரு. முத்துராமன், குடும்பத்தில் மூத்தவர். அவருடன் பிறந்தவர்கள் 3 தம்பிகள்; 2 தங்கைகள். தம்பிகளில் ஒருவர் பொறியாளர்; அடுத்தவர் ஆர்வோ ஃபிலிம் நிறுவனத்தில் பணியாற்றுகிறார். கடைசித்தம்பி சென்னை எஸ். ஐ. வி. இ. டி. கல்லூரியில் பேராசிரியர்.


திரு. முத்துராமனின் துணைவியார் திருமதி கமலா ஆச்சி, சீர்திருத்தவாதி கானாடுகாத்தான் வை. சு. சண்முகம் செட்டியார் அவர்களின் பேத்தி ஆவார். இவர்களுக்கு மீனாட்சி B A, சுப்பையா M Com, டாக்டர் விசாலாட்சி M B. B. S. - என இரு புதல்விகளும் ஒரு புதல்வரும். அனைவருக்கும் திருமணம் நடைபெற்றுள்ளது. திரு. முத்துராமனின் புதல்வர் திரு. எம். சுப்பையா சென்னையில் ஆணி தயாரிக்கும் தொழிற்சாலையை நிறுவி அதைக் கவனித்து வருகிறார்.

நேர்முகத்தை முடித்துக் கொண்டு விடைபெற்றபோது பண்பாடுமிக்க ஒரு நல்ல இயக்குநரைச் சந்தித்த மகிழ்ச்சியும் மன நிறைவும் ஏற்பட்டது.

நேர்முகம் : எல். சுந்தரம்

ஃ 'சங்கீத பூஷணம்' திரு. கந்த தாசன் இராமநாதன் சென்னை ராஜா அண்ணாமலைபுரத்திலுள்ள ஸ்ரீ அய்யப்பசாமி கோவிலில் 6-12-89 அன்று சங்கீதக் கச்சேரி செய்ய உள்ளார்.

திருமண வரவேற்பு



முதல் படம்: 'கலைமாமணி' இயக்குநர் எஸ்பி. முத்துராமன் அவர்களது புதல்வர் திரு. எம். சுப்பையாவின் திருமண வரவேற்பில் மணமக்களுடன் நடிகர் ரஜினிகாந்த், லதா ரஜினிகாந்த் ஆகியோர்.

இரண்டாவது படம்: மேற்படி வரவேற்பில் மணமக்களுடன் 'நடிகர் திலகம்' சிவாஜி கணேசன், கமலா சிவாஜி கணேசன் திரு. எஸ்பி. முத்துராமன், திருமதி கமலா முத்துராமன் ஆகியோர்.

உங்கள் குரல்

''நகரத்தார் குரல்'' நவம்பர்' 89 இதழில் மணி விழாச் செய்திகள் ஏராளம். எனவே அதை மணி விழாச் சிறப்பிதழாகக் கருதலாமா?

வி. சிதம்பரம்
திண்டுக்கல்

நவம்' 89 இதழில் கண்ணுடைய நாயகி அம்மனின் அட்டைப் படம் கண்களைக் கவர்ந்தது. கவிதை வரிகள் நெஞ்சைக் கவர்ந்தன.

ராம. வள்ளியப்பன்
சென்னை.

முனைவர் தமிழண்ணல், முனைவர் சுப. அண்ணாமலை ஆகிய இருவரின் பாராட்டு விழாச் செய்திகளின் தொகுப்பு மிக அருமையாக இருந்தது. விழாவை நேரில் பார்த்த மகிழ்ச்சி ஏற்பட்டது.

எஸ்பி. இராமநாதன்
புதுக்கோட்டை

முனைவர் தமிழண்ணல் அவர்களின் மணி விழாச் செய்திகள் நவம்' 89 இதழில் சிறப்பாகத் தொகுத்து வெளியிடப்பட்டுள்ளன. இளம் பொறியாளர் திரு. சி. அண்ணாமலை பற்றி நாம் பெருமிதம் கொள்ளலாம்.

சே. நாச்சியப்பன்
திருப்புத்தூர்

நகரத்தார் இனம் பற்றி கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் கூறியிருப்பது நம்மைப் பெருமை கொள்ளச் செய்கிறது.

வெ. மெய்யப்பன்
திருச்சி.

'நகரத்தார் சமூகம் தலை சிறந்த சமூகம்' என நம் சமூகத்தைப் பற்றி கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் கூறியதைப் படித்தோம்; மகிழ்ச்சி கொண்டோம். 'பலர் வசதியாக இருப்பதை விடச் சிலர் கூட தாழ்ந்த நிலையில் இருக்கக் கூடாது' என்ற அவரது கருத்து அருமையான கருத்து. செல்வந்தர்கள் சிந்தித்துச் செயல்பட்டால் நல்லது.

கனகு சுப்பு
கல்யாணி கணேசன்
நன்னிலம்

கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் கூறியிருப்பதுபோல் முனைவர் திரு. சுப. அண்ணாமலை முனைவர் திரு. தமிழண்ணல் ஆகிய இருவரும் சமூகத் தொண்டில் ஈடுபட நம்மவர்கள் தூண்டுகோலாக இருந்து ஒத்துழைத்தால் நல்லது.

மேலைச்சிவபுரி முத்துராமன்
திருச்சூர்.

இளைஞர்களின் வழிகாட்டி லேனாவுடன் ஒரு பேட்டி

சமூகச் சீர்திருத்தவாதி அமராவதிபுதூர் பிச்சப்பா சுப்பிரமணியம் அவர்களின் மகள் வயிற்றுப் பேரனும் பிரபல எழுத்தாளராக இருந்து அரிய சாதனைகள் பல நிகழ்த்திய தமிழ்வாணன் அவர்களின் புதல்வருமான திரு. லேனா தமிழ்வாணனை ''கல்கண்டு'' வாசகர்கள் மட்டுமல்ல, இந்த நாடே நன்கு அறியும்.


35 வயது இளைஞரான திரு. லேனா தமிழ்வாணன் M. A. பட்டதாரி மட்டுமல்ல; பண்பாளர்; மனிதர்களை மதிக்கத் தெரிந்தவர்; நல்ல குண நலன்களைப் பெற்றவர்; இனிய நண்பர்; சிறந்த பத்திரிகையாளர்.

தமிழ்வாணன் அவர்களின் மறைவுக்குப் பிறகு ''கல்கண்டு'' இதழின் ஆசிரியர் பொறுப்பை ஏற்று அவரை மிஞ்சும் விதத்தில் தன் பணியைச் சிறப்பாகச் செய்து வருபவர். பத்திரிகைத் துறையோடு பதிப்புத் துறையையும் ஆர்வத்தோடு கவனித்து வருபவர்.

அண்மையில் சென்னை சென்றிருந்த நான், அவரது பணிகளைப் பற்றியும் அவரது வளர்ச்சி பற்றியும் அறிந்து வந்து நமது ''நகரத்தார் குரல்'' வாசகர்களோடு பகிர்ந்து கொள்ளும் நோக்கில் அவர்களது இல்லத்தில் அவரை நேர் முகம் கண்டேன். அப்போது அவர் அன்போடும் ஆர்வத்தோடும் - பல வேலைகளை ஒதுக்கி வைத்து விட்டு எனக்குப் பேட்டியளித்தார். என்னுடைய வினாக்களுக்கு அவர் சற்றுக் கூட யோசிக்காமல் - அதே நேரத்தில் கருத்தோடு மளமளவெனப் பதிலளித்தது என்னை வியப்பில் ஆழ்த்தியது.

பேட்டியைத் தொடர்வோம். படித்துச் சுவைக்க வாருங்கள்.

''எழுத்துத் துறையில் உங்களுக்கு ஆர்வம் எப்படி



திரு. லேனா தமிழ்வாணன்


ஏற்பட்டது? கொஞ்சம் சொல்லுங்களேன்....''

''அது ஒரு வேடிக்கையான நிகழ்ச்சி. 'புலிக்கு ஆபரேஷன்'னு ஒரு கட்டுரை எழுதி என் தந்தையின் கையில் கொடுத்து 'இதை நீங்க வெளியிடணும்'னு நான் கேட்டுக்கிட்டேன். அதை வாங்கிக்கிட்ட அவுங்க சுவாரஸ்யமா அதைப் பிரிச்சுப் படிக்கலே; சந்தோஷப்படலே; ஒண்ணுமே செய்யாமே அப்படியே வாங்கி வெச்சுட்டாங்க. நானும் மறந்துட்டேன். சில வாரங்கள் கழித்து அந்தக் கட்டுரை ''கல்கண்டு''லே இடம் பெற்றது. அதை விட ஆச்சரியம் மறு வாரம் 15 ரூபாய்க்கு செக் ஒன்று கையிலே கொடுத்தாங்க. அதற்கு அடுத்த வாரம் அந்தக் கட்டுரையைப் பத்தி வாசகர்களிடமிருந்து வந்த கடிதங்களைக் கையிலே கொடுத்தாங்க. படிக்கிற காலத்திலே என் படிப்புக் கெட்டு விடக் கூடாதுன்னுதான் அவுங்க முறையான தூண்டுதல் பண்ணலே. அவுங்க கொடுத்த செக்கும் கடிதங்களும் எனக்கு மறைமுகமான தூண்டுதல்னு நான்புரிஞ்சுக்கிட்டேன். அதிலேயிருந்து நான் தொடர்ந்து எழுத ஆரம்பிச்சேன். தொடர்ந்து 15 ரூபாய் செக் வந்துக்கிட்டே இருந்தது. வாசகர்களுடைய பாராட்டுகள் எனக்கு ரொம்பத் தூண்டுதலா இருந்தது. படிக்கிற காலத்திலே கேட்கக் கேட்கப் பணம் தராமே எழுதினுப் பணம்கிற மாதிரியான கருத்தை மனசுலே விதைச்சிட்டாங்க. மத்தபடி தமிழ்வாணனின் வாரிசா உருவாகணும்னு மாபெரும் எழுத்தாளனு வரணும்னு ஆசை பெரிசா ஏற்பட்டதில்லே. போகப் போக எழுத்துத் துறையில் சுவாரசியம் அதிகமானதால் நான் முறைப்படி 'ஜெர்னலிசம்' படிச்சேன். அதன்பிறகு தந்தையின் மறைவின் காரணமாக பொறுப்புக்களை ஏற்று முழு நேர எழுத்தாளனுனேன்.''

பத்திரிகைத் துறை-பதிப்புத் துறை

''பத்திரிகைத் துறையில், பதிப்புத் துறையில் உங்கள் வெற்றியின் இரகசியம் என்ன?''

''நான் வெற்றியடைஞ்சிருக்கேனு இல்லியா என்கிறதை உங்களைப் போன்றவர்களும் நம் சமூகத்தைச் சேர்ந்தவர்களும் வாசகர்களும்தான் முடிவு பண்ணனும். நான் வெற்றியடைஞ்சிருக்கிறதா நீங்கள் மனப்பூர்வமா நம்பினுல் அந்த வெற்றிக்கு என் தந்தை வகுத்துக் கொடுத்த பாதைதான் காரணம் என்று நான் சொல்வேன். எடுத்துக் காட்டா ''கல்கண்''டிலே அவுங்க பாணி தனிப் பாணி. பல பத்திரிகைகள் பல மாதிரி நடந்துக் கிட்டிருந்த நேரத்திலே ''கல்கண்டு'' இப்படித்தான் அமையணும்னு அவுங்க ஒரு இலக்கணம் வகுந்திருந்தாங்க. அவுங்க வகுத்துக் கொடுத்த பாதையிலிருந்து இன்னும் விலகாமே நாங்க அதையே பின்பற்றி நடத்திக்கிட்டிருக்கிறோம். அதனுலே அந்த வெற்றி தொடர்ந்து கிடைச்சுக்கிட்டிருக்கு பதிப்பகத் துறையிலே வெற்றி பெறணும்னு அப்பா சொல்லுவாங்க ''ஒரு சராசரி மனிதனுக்குத் தேவையான பயனுள்ள புத்தகம் அல்லது சுவாரஸ்யமான புத்தகம் இந்த இரண்டில் ஏதாவது ஒன்றைத்தான் வெளியிடணும். எந்த ஒரு நூலாக இருந்தாலும் எந்த ஒரு தலைப்பாக இருந்தாலும் இந்த இரண்டுக்குள் அடங்கணும். அப்படி அடங்கவில்லேனு அது வீசைக்குத் தான் போடும் படியா ஆயுடும்''னு அதற்கு ஒரு இலக்கு நிர்ணயிச்சாங்க. அப்படி இந்தப் பாணிகளைப் பின்பற்றுவதால் தான் நீங்க சொல்ற வெற்றியை நாங்க அடைஞ்சிருக்கோம் என நினைக்கிறேன்.''



அன்பானவர்-வழிகாட்டி

''இளைஞர்கள் உங்கள் மீது அன்பைச் சொரிவதற்கும் உங்களை வழிகாட்டியாகக் கொள்வதற்கும் காரணம் என்ன?''

''எனக்கு இதைக் கேட்கும்போது ரொம்பச் சந்தோஷமாவும் இருக்கு; ஒரு புறம் வியப்பாவும் இருக்கு. பொதுவா தமிழ் நாட்டிலே என்ன பழக்கம்னா யாரு சொல்றாங்கன்னு தான் பார்ப்பாங்களே தவிர என்ன சொல்றாங்கன்னு அதிகமாப் பார்க்கிறதில்லே. வேறு வகையிலே சொன்னா வயதானவர்கள் சொன்னாலோ நடுத்தர வயதினர் சொன்னாலோ தான் அது ஏத்துக்கக்கூடிய விஷயம். ஒரு இளைஞன் சொன்னா அதிலே ஒத்துக்கக்கூடிய விஷயம் இருக்காதுங்கிற கருத்திலே நிறையப்பேர் இருந்தாங்க. ஆனால் என்னுடைய அணுகு முறைகளைப் பின்பற்றி, அதில் பலன் இருப்பதைப் பார்த்துட்டு அவர்கள் என்னை விரும்புறாங்கன்னு நான் நினைக்கிறேன். நான் பந்தாக்களை வெறுக்கிறவன். எல்லோருடனும் கலந்து பழக நினைக்கிறவன். என்னிடத்திலே அபிமானம் கொண்டு கடிதம் எழுதினால் பதில் எழுதுகிறேன். திருமணம்-னு அழைப்பு அனுப்பினா வாழ்த்து அனுப்புகிறேன். அவர்கள் வீட்டில் துன்பம்னா அதைப் பகிர்ந்து கொள்கிறேன். நேரில் பார்த்தா எளிமையா கலந்து பழக நினைக்கிறேன். எழுதுகிறது ஒண்ணு; பேசுகிறது ஒண்ணு; நடந்துக்கிறது ஒண்ணுன்னு இல்லாமே முரண்பாடுகள் இல்லாத அளவுக்குப் பழகுகிறதினாலேயும் இளைஞர்கள் என்னை விரும்புறாங்கன்னு நினைக்கிறேன்.''

குணமும் - பணமும்

''குணம், பணம் இவை இரண்டில் நீங்கள் மதிப்புக் கொடுப்பது எதற்கு?''

''யாரைக் கேட்டாலும் குணம்னுதான் சொல்லுவாங்க. நடைமுறையாப் பார்க்கும்போது பணத்துக்கும் நாம போதுமான இடத்தைக் கொடுக்க வேண்டியிருக்கு. வெறும் குணம் போதும் என்கிற ஏமாற்றுதலான பதிலேயோ மேம் போக்கான பதிலேயோ சொல்ல விரும்பலே. அதே நேரத்தில் குணத்திற்கு அதிக மதிப்பும் பணத்திற்கு ஓரளவு மதிப்பும் கொடுக்கிறவன் நான்.''

இனப்பற்றும் முன்னேற்றமும்

''நம்மவர்களிடையே இனப்பற்று இல்லே. அதனுல் தான் பலர் வாய்ப்பு இருந்தும் முன்னேற முடியாமல் இருக்கிறுர்கள்' என்று கூறப்படுவது பற்றித் தங்கள் கருத்து என்ன?''

''இனப்பற்று இல்லேங்கிறதை நான் நம்பலே. நம்மிடை-யே இனப்பற்று இருக்கு. முறையான தலேமை இல்லாததினுலேயும் கொண்டு செலுத்த ஒரு சரியான ஆள் இல்லாததினுலேயும் நாம் பரந்து பரவி இருப்பதனுலேயும் ஒருவருக்கொருவர் தொடர்பு இல்லாமே இருக்கிறேம். இதனுல் சில பிரச்னேகள். திருமணங்களின் போது மட்டும் சந்திச்சுக்கிட்டு அப்புறம் எங்கெங்கோ பிரிஞ்சு போயிடுகிற மாதிரியான சூழ்நிலேயில் ஒருவரை ஒருவர் கையேற்றிவிடும்படியான நிலேகள் இல்லாததினுலும் இனப்பற்றுக் குறைவாக இருக்கிற மாதிரித் தெரியுது. உண்மையிலே இனப்பற்று குறைஞ்சு போகலே.''

''நம்சமூகத்தில் திருமணம் ஆகாமல் உள்ள பெண்களின் பிரச்னேக்குத் தீர்வு என்ன?''

''இயற்கையே பெண்களுக்கு எதிராக இருக்கிறது.. என்ன செய்வது...? நகரத்தார் பிறப்பு விகிதப் புள்ளி விவரப்படி, பெண் குழந்தைகளே அதிகமாகப் பிறக்கின்றன. எனவே பல பெண்கள் திருமணமாகாமல் தங்கி விடுகிறுர்கள். மாப்பிள்ளேகளுக்குப் பஞ்சம் என்பதால் வரதட்சணே நிர்ப்பந்தங்கள் அதிகமாகி விடுகின்றன. தொகை உயர்ந்து விடுகிறது. ஆனுல் நகரத்தார் இளேஞர்கள் மீது எனக்கு நல்ல நம்பிக்கை இருக்கிறது. ஆத்தாவை அப்பச்சியால் சரி செய்ய இயலாவிட்டாலும், மகனுல் ஆத்தாவைச் சரி செய்ய இயலும். 'நகையை, தொகையை வற்புறுத்திக் கேட்காதீர்கள். மனசுக்குப் பிடிச்ச பெண் வேணும். பெண் வீட்டார் மனம் கோணுமல் தர்றதைத் தரட்டும்' என ஒவ்வோர் இளேஞரும் வீட்டில் போர்க் கொடி தூக்க வேண்டும். அப்போது நிலேமை மாறுகிறதா இல்லேயா பாருங்கள்!''

(அடுத்த இதழில் முடியும்)

திருச்சி சங்கம: நிர்வாகிகள் தேர்வு

திருச்சி நகரத்தார் சங்கத்தின் சிறப்புப் பேரவைக் கூட்டம் திருச்சியில் 14-10-89 அன்று சங்கத்தின் தலேவர் திரு. எல். என். லெட்சுமணன் தலேமையில் நடை பெற்றது. அப்போது திரு. எஸ்பி. அருணுசலம் தலேவராகவும் திரு. கே. ஆர். கருப்பன் செட்டி துணேத் தலேவராகவும் திரு. ஏ. பழநியப்பன் செயலாளராகவும் திரு. கே. இ. மெய்யப்பன் துணேச் செயலாளராகவும் திரு. வி. சிதம்பரம் பொருளாளராகவும் தேர்வு செய்யப் பெற்றனர்.

''ஊர் வம்பு பேசுவது மாற வேண்டும்''

நகரத்தார்கள் பொறுப்பான இடங்களிலே நியமிக்கப்படுகிறூர் கள். அப்படிப்பட்ட அவர்கள் அங்கு முறையாக, செம்மையாக, தம்முடைய பணிகளைச் செய்து வருகிறூர்கள்.

நம்முடைய இனத்திலே சில குறைபாடுகள் உள்ளன. இரண்டு நகரத்தார்கள் சேர்ந்தால் மூன்றுவது நகரத்தார் பற்றிப் பேசு கிறூர்கள். ஊர் வம்பு, ஊர்ப் பேச்சுப் பேசுவது மாற வேண்டும். அடையாளப் பெயர்களைக் குறிப்பிட்டுப் பேசுவது நிறுத்தப்பட வேண்டும், வேகமான இந்த உலகில் நாம் நம்முடைய வேலை களைக் கவனிக்க வேண்டும்.

தமிழ் நாட்டில் உள்ள 300 பதிப்பகங்களில் 240 பதிப்பகங் கள் நம்மிடம் உள்ளன. இங்கு தேவகோட்டை நகரத்தார்கள் இருந்தால் பெருமைப்படலாம். முன்னணியில் உள்ள 10பதிப் பகங்களில் 6 தேவகோட்டை நகரத்தார்களுக்குச் சொந்த மானது. நீங்கள் எல்லாம் அந்த நூல்களை வாங்கி ஆதரிக்க வேண்டும்,

— லேனு தமிழ்வாணன்

(மதுரை ராஜா முத்தையா மன்றத்தில் 15-10-89 அன்று நடைபெற்ற நகரத்தார் புத்தக வங்கியின் முதலாம் ஆண்டு நிறைவு விழாவில்)

பணக்காரனும் ஏழையும்!

நகரத்தாரில் யாரும் தொடர்ந்து பணக்காரராக வாழ்ந்த தில்லை; தொடர்ந்து ஏழையாகவும் வாழ்ந்ததில்லை. இன்றைய ஏழை, நாளை பணக்காரனுகலாம்; இன்றைய பணக்காரன், நாளை ஏழையாகலாம்.

— வி. என். சிதம்பரம் செட்டியார்

(மதுரையில் 15-10-89 அன்று நடைபெற்ற நகரத்தார் புத்தக வங்கியின் முதலாம் ஆண்டு நிறைவு விழாவில்)

வழுக்கு நிலமும் ஊன்று கோலும்!

மதுரை மாநகர் நல்லவர்களையும் வல்லவர்களையும் பெருமைக் குரியவர்களையும் பாராட்டத் தவறுவதில்லை. திரு. தமிழண்ணல் தமிழ் உலகம் அறிந்தவர். சமுதாய வழுக்கு நிலத்தில் அவ ருடைய எழுத்துக்கள் ஊன்று கோலாக உள்ளன.

— மணிமொழியன்

(முனைவர் தமிழண்ணல் அவர்களின் மணி விழாவையொட்டி 7-10-89 அன்று மதுரையில் நடைபெற்ற பாராட்டு விழாவில்)

மாணிக்க விநாயகரின் மலரடி பணிவோம்

— கவிஞர் சொக்கு சுப்பிரமணியன் —

(மதுரை சொக்கிகுளம் வானொலி நகரில் எழுந்தருளியிருக்கும் மாணிக்க விநாயகர் பற்றிய பதிகம்)

மலையரசி பெற்றமகன்; மன்றில் ஆடும்
மன்னவனின் அன்புமகன்; வைகை என்னும்
அலையரசி தந்தமகன்; அன்புக் கோவில்
ஆளுகின்ற யானைமுகன்; மதுரை என்னும்
கலைநகரில் சொக்கிகுளம் தன்னில் உள்ள
கலைவளர்க்கும் வானொலியூர் வாழும் தேவா !
மலைப்பழமாய் அருள்புரிவாய்; ஐயா எங்கள்
மாணிக்க விநாயகனே ! போற்றி ! போற்றி !

வேற்கண்ணாள் மீனாட்சி அன்னை பாட,
விருப்பமுடன் சொக்கேசர் பார்த்து நிற்க,
பாற்கடலின் பாயலினை நீங்கி வந்து
பச்சைமலை அழகர்மலை ஆளும் மாமன்
நூற்கடலாம் கள்ளழகர் சீர்கள் செய்ய,
நுவலரிய கணபதியே ! கோவில் கொண்டாய் !
பாற்கடலாய்த் தமிழிசையை நாளும் கேட்பாய் !
பரம்பொருளின் திருமைந்த போற்றி ! போற்றி !

அயிலுகந்த கயமுகனை வென்ற தீரா !
அமரர்குலக் கணநாதா ! பொல்லாப் பிள்ளை
வெயிலுகந்த விநாயகனே ! விகட சக்ர
விநாயகனே ! முக்குறுணிப் பிள்ளை யாரே !
மயிலுகந்த வேலனுக்கு முன்னர் வந்து
மனம்வளரும் மலையுச்சிப் பிள்ளை யாரே !
ஒயிலுகந்த கன்னியரும் மணமே காண
உதவும்எம் கற்பக மூர்த்தி போற்றி !

ஞானத்தின் திருவுருவே ! அருள் சுரந்து
ஞானப்பால் தந்திடும்உன் கமலப் பாதம் !
மோனத்தில் உலகாளும் ஈசன் மைந்தா !
மூவுலகைப் பேழையிலே தேக்கி வைத்து
வானத்தின் அமுதாக அருளைப் பெய்து
வளம்தந்து புரக்கின்ற உமையின் செல்வா !
கானத்துக் களிறுக உருவம் கொண்ட
கணபதியே திருவடிகள் போற்றி ! போற்றி !

தேன்தந்த மலர்சூடி, அறுகம் புல்லின்
தெய்வீக மாலையினை விரும்பி ஏற்ற
கான்கந்த உயிர்க்களிறே ! கோயில் எங்கும்
கலைவடிவாய்ச் சுடர்வீசும் ஞான மூர்த்தி !
வான்தந்த நங்கைபரங் குன்றந் தன்னில்
வடிவேலன் துணையாக உதவி செய்தாய் !
மான்தந்த வள்ளிக்கு மணம் முடித்தாய் !
மாணிக்க விநாயகனே ! போற்றி ! போற்றி !

91/1

1100 நூல்களை வெளியிட்டுள்ள பதிப்பகம்!

தேவகோட்டையைச் சேர்ந்தவரும் ''கல்கண்டு'' இதழின் ஆசிரியராக இருந்தவருமான எல். இராமநாதன் என்ற தமிழ்வாணன் அவர்களால் 1954ல் சென்னையில் தொடங்கப் பெற்ற 'மணிமேகலைப் பிரசுரம்' இதுவரை ஆயிரத்து நூறு நூல்களை வெளியிட்டுப் பதிப்பகத் துறையில் அரிய சாதனை நிகழ்த்தியுள்ளது.

திரு. தமிழ்வாணன் எழுதியுள்ள 500 நூல்களையும் அவரது புதல்வர் திரு. லேனா தமிழ்வாணன் எழுதியுள்ள 36 நூல்களையும் மணிமேகலைப் பிரசுர ஆசிரியர் குழு (குழுத் தலைவர்-திரு. லேனா) படைத்துள்ள 564 நூல்களையும்- ஆக 1100 நூல்களை மணிமேகலைப் பிரசுரம் இதுவரை வெளியிட்டுள்ளது.


திரு. தமிழ்வாணன் எழுதியுள்ள முதல் நூல் ''கண்ணம்மா'' (சமூக நாவல்) ஆகும். கடைசியாக எழுதியது ''யோகாசனம் கற்றுக் கொள்ளுங்கள்'' என்பதாகும்.

திரு. லேனா தமிழ்வாணன் எழுதியுள்ள முதல்நூல் ''கோபத்-தைக் குறைத்துக் கொள்வது எப்படி?'' என்பதாகும். அண்மையில் எழுதியிருப்பது ''ஒரு பக்கக் கட்டுரைகள்- பாகம் 8'' ஆகும்.

அண்மையில் சென்னை சென்றிருந்த நான் தற்செயலாக மணிமேகலைப் பிரசுரத்திற்குச் சென்று எனது அருமை நண்பரும் அப்பிரசுரத்தின் நிர்வாகப் பங்காளருமான திரு. ரவி தமிழ்வாணனுடன் பேசிக் கொண்டிருந்த போது இந்த விவரங்கள் தெரிய வந்தன.

''நீங்கள் வெளியிட்டுள்ள நூல்களில் அதிகமான பிரதிகள் விற்பனையான நூல்களில் சிலவற்றைத் தெரிவிக்கலாமா?'' என திரு. ரவியிடம் கேட்ட போது—

''நம் காரியத்தை நாம் சாதித்துக் கொள்வது எப்படி?, கராத்தே கற்றுக் கொள்ளுங்கள், பிரபலமானவர்களின் முகவரிகள் ஆங்கிலத்தில் பேசுவது எப்படி'



திரு ரவி தமிழ்வாணன்

போன்ற பல நூல்கள் அதிக அளவில் விற்பனையாகி உள்ளன'' எனத் தெரிவித்தார்.

பிற எழுத்தாளர்களின் நூல்களை தம் பதிப்பகத்தின் மூலம் வெளியிடுவதில்லை என்கிற தமது தந்தையின் கொள்கையைத் தொடர்ந்து கடைப்பிடித்து வருவதாக அவர் தெரிவித்தார்.

- எல். சுந்தரம்

திருமணம்


பொன் புதுப்பட்டி எம். எஸ். எஸ்பி. சுப்பையா செட்டியார் அவர்கள் புதல்வன் செல்வன் அண்ணாமலை B. Com க்கும் நெற்குப்பை எம் ஆர். பிஎல். எம். முத்துக்கருப்பன் செட்டியார் அவர்கள் புதல்வி செல்வி அலமேலு B A க்கும் நெற்குப்பையில் 15-11-89 அன்று திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

துலாவூரில் குருபூஜை

நகரத்தார் பெண்கள் குரு பீடமான துலாவூரில் ஆதி நிரம்ப அழகிய தேசிக சுவாமிகளின் குருபூஜை 15-10-89 அன்று சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. 'காசிஸ்ரீ' திரு. அரு. சோமசுந்தரன் வரவேற்றார். இவ் விழாவில் கண்டனூர் ப. இலட்சு மணன் அவர்கட்குத் துலாவூர் ஆதீனகர்த்தர் 'அறமனச் செம் மல்' என்ற பட்டத்தினை வழங் கிப் பொன்னுடை போர்த்திச் சிறப்பித்தார். திருவாளர்கள் சோம. நாராயணன் 'இரசிக மணி' இராம. சிதம்பரம் செட்டி யார், இராம. ஏகப்பன், 'அற மனச் செம்மல்' சோம. இயற் பகை செட்டியார், சிவபூசகர் சொக்கலிங்கம், எஸ். பி. எஸ். மெய்யப்பன், புலவர் இராம. வீரப்பன் பழ. தெ. லெ. அருணு சலம் செட்டியார், அரு. வ. வள்ளியப்பன் செல்வி மீனுட்சி ஆகியோர் உரையாற்றினர். பாதரக்குடி சுவாமிகள் ஆசியுரை வழங்கினுர். திரு. ப. இலட்சு மணன் ஏற்புரை வழங்கினுர்.

ஆறு கவிதைகளுக்குப் பரிசளிக்கும் நிறுவனம்

காஞ்சிபுரத்தில் உள்ள "இந்து தமிழ்க் கவிஞர் தலைமை மன்றம்" என்ற அமைப்பு ஆண்டுதோறும் இரு முறை கவி தைப் போட்டிகளை நடத்தி வரு கிறது. நவராத்திரி நாளை ஒட்டி யும் பொங்கல் விழாவை ஒட்டி யும் நிகழும் இப்போட்டிகளில் பரிசுக்குரியனவாக ஒவ்வொரு முறையும் ஆறு கவிதைகள் (சிறப் புப் பரிசு 3; பொதுப் பரிசு-3) தேர்ந்தெடுக்கப் பெறுகின்றன. இவ்வாண்டு 1989 நவராத்திரிக் குரிய கவிதைப் போட்டியின் பொதுப் பரிசுகளில் ஒன்றைக் கவிஞர் திரு. இராகவன்முத்து பெற்றிருக்கிறுர். பரிசுக்குரியதா கத் தேர்வாகிய அவருடைய பாடல், "மதுரை மீனுட்சி அம்மை திருப்பள்ளி எழுச்சி மாலை" என்பதாகும்.



செய்திகள் வாசிப்பவர்...

எல். சுந்தரம்

ஃ பொற்கிழிக் கவிஞர், பேராசிரியர், திரு. சொ. சொ. மீ. சுந்தரத்தின் தம்பி திரு. எஸ். எஸ். மீனாட்சிசுந்தரம் I. A. S. இப்போது புதுடில்லியில் உள்ள மத்திய பால் பண்ணை அபிவிருத்திக் கழகத்தில் இணைச் செயலாளராகப் பணியாற்றி வருகிறார்.

ஃ கனரா வங்கியில் உதவிப் பொது மேலாளராகப் பணிபுரிந்து வந்த அரியக்குடியைச் சேர்ந்த திரு. ஆர். எம். வெங்கடாசலம் இப்போது பொது மேலாளராகப் பதவி உயர்வு பெற்றுள்ளார்.

ஃ 'டாக்டர் சுப. அண்ணாமலையின் இலக்கியப் பணி' என்ற தலைப்பில் முனைவர் சுப. அண்ணாமலை அவர்களின் மாணவர் திரு. எல். கே. சுபாஷ்சந்திரபோஸ் முனைவர் பட்டத்திற்காக ஆய்வு செய்து வருகிறார்.

ஃ தேவகோட்டை கந்தர் சஷ்டி விழாக் கழகத்தின் 44 ஆவது ஆண்டு நிகழ்ச்சிகள் தேவகோட்டை முருகவேள் சதுக்கத்தில் 29-10-89 முதல் 6-11-89 வரை சிறப்பாக நடைபெற்றன.

ஃ சென்னை கந்தர் சஷ்டி விழாக் கழகத்தின் சார்பாக 30-10-89 முதல் 4-11-89 வரை சென்னை பவளக்காரத் தெருவில் உள்ள தெண்டாயுதபாணி கோயில் வீட்டில் கந்தர் சஷ்டி விழா நடைபெற்றது.

ஃ காவிரிப்பூம்பட்டினம் அருகேயுள்ள சாயாவனத்தில் இல்லையே என்னாத இயற்பகை நாயனாருக்கு 17-12-89 முதல் 21-12-89 வரை 5 நாட்கள் திருவிழா நடைபெற உள்ளது.

ஃ மதுரையில் 15-10-89 அன்று நடைபெற்ற நகரத்தார் புத்தக வங்கியின் முதலாம் ஆண்டு நிறைவு விழாவில்-பிள்ளையார்பட்டியில் கூட்டுத் திருமணங்களை சிறப்பாக நடத்தி வரும் திருச்சி நகரத்தார் சங்கத்தைச் சேர்ந்த 21 ஆண்களும் 12 பெண்களும் கௌரவிக்கப் பெற்றனர்.

ஃ 11-12-89 (கார்த்திகை மீ 26௳) திங்கட்கிழமையன்று திருக்கார்த்திகை. அன்று திருவண்ணாமலையில் தீப ஒளிக்காட்சி கண்களைக் கவரும்.

ஃ பாகனேரியைச் சேர்ந்த டாக்டர் என். என். கண்ணப்பன் அவர்கள் தனது பிறந்தநாளை (19-11-89) ஒட்டி 180 ஆவது இலவச மருத்துவ முகாமை நடத்தி கண்பார்வையற்றவர்களுக்கு உதவினார்.

ஃ அக்டோபர் '89ல் கோழிக்கோட்டில் (கேரளம்) நடைபெற்ற அகில இந்தியப் பல்கலைக் கழகங்களுக்கிடையேயான 200 மீட்டர் தடகளப் போட்டியில் கடியாபட்டியைச் சேர்ந்த திரு. ஆர். ஆனந்த நடராஜன் கலந்து கொண்டு முதலாவதாக வந்தார்.

சிவஸ்ரீ தத்புருஷ தேசிகரின் பவள விழா

ஏராளமான கோயில் திருப் பணிகள் செய்துள்ள தேவகோட் டை வயிநாகரம் குடும்பத்தைச் சேர்ந்தவரும் சைவ அன்பர்கள் பலருக்குத் தீட்சை வழங்கி வரு பவரும் ஞானசிரியருமான சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் (பால கவி வே. இராமநாதன் செட்டி யார்) அவர்களின் பவள விழா வும் தமிழகச் சைவ நெறிக் கழ கத்தின் சிவபூசை மாநாடும் வரு கிற 23-12-89 (மார்கழி சுவாதி



நாளில்) சனிக் கிழமையன்று தேவகோட்டையில் நிகழவிருக் கின்றன. சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் அவர்களின் பவள விழா வின் போது அவர்களுக்குப் பொற்கிழி வழங்கவும் பவள விழாவையொட்டிச் சிறப்பு மலர் வெளியிடவும் தீர்மானிக்கப் பெற்றுள்ளது.

இதற்காகத் தொழிலதிபர் லெ. நாராயணன் செட்டியார் அவர்களைத் தலைவராகவும் திரு வாளர்கள் இராம. ரெங்கநாதன் செட்டியார், முனைவர் சுப. அண்ணாமலை, கா. அரு. கா. காடப்ப செட்டியார், ப. மூக்கப் பிள்ளை, T. கோபால் ஆகியோ ரைத் துணைத் தலைவர்களாகவும் திரு. கு. ப. சொக்கலிங்கம் திரு. எஸ். ரெகுநாதன் இருவரையும் செயலாளர்களாகவும் திரு. ப. சுப்பிரமணிய பிள்ளை, திரு. நா. சா. இராமநாதன் இருவரையும் இணைச் செயலாளர்களாகவும் திரு. சிக. அரு. சோம. இராம நாதன் செட்டியார் அவர்களைப் பொருளாளராகவும் கொண்டு ஒரு குழு அமைக்கப் பெற் றுள்ளது.

மலர்க் குழுவிற்கு லெ. நாராயணன் செட்டியார் அவர் கள் தலைவராகவும் திரு. சு. தி. பழநியப்ப செட்டியார் துணைத் தலைவராகவும் திரு. லெ. மு. மு. முத்துமாணிக்கம் அமைப்பாள ராகவும் முனைவர் திரு. ந. மாணிக்கம் பதிப்பாசிரியராகவும் பொறுப் பேற்றுள்ளனர்.


பவள விழாச் சிறப்புடன் நிகழ, சிவஸ்ரீ தேசிகர் அவர்களி டம் பேரன்பு கொண்டவர்கள், சிக. அரு. சோம. இராமநாதன் செட்டியார் அவர்கள், பொரு ளாளர், தேசிகர் பவள விழாக் குழு, 147 தெற்கு மாசி வீதி மதுரை-625 001 என்ற முக வரிக்கு நிதி அனுப்பிவைக்கும் படியாகக் கேட்டுக்கொள்ளப் பெறுகிறார்கள்.

திருமணம்

திரைப்படத் தயாரிப்பாள ரும் இயக்குநருமான 'கலைமா மணி' வலம்புரி சோமநாதன் அவர்களின் புதல்வி செல்வி அஜந்தா என்கிற வள்ளியம்மை B. Comக்கும் மேலைச்சிவபுரி அரு. சுப. சோமசுந்தரம் செட்டியார் அவர்கள் புதல்வன் செல்வன் சுகுமார் என்கிற சுப்பையா M. Sc MCSI க்கும் வலையபட்டி பிஎல். கே. திருமண மண்டபத் தில் 10-11-89 அன்று திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

பாராட்டுகிறோம்

படத்தில் காணும் செல்வன் வீ. சொக்கலிங்கம் காரைக்குடி முத்துப்பட்டணத்தைச் சேர்ந்த ஆர். வீரப்பன் அவர்களின் புதல்வர். திருச்சி, தெப்பக்குளம் பிஷப் ஹீபர் மேல்நிலைப் பள்ளியில் படித்த இவர், மார்ச்' 89 ல் +2 தேர்வு எழுதி 1200க்கு 1081 மதிப்பெண்கள் பெற்று அமோக வெற்றி பெற்றுள்ளார்.



அதற்காக அவரது திறமையைப் பாராட்டுகிறோம். மருத்துவம், பொறியியல், வேளாண்மை ஆகிய மூன்று துறைகளிலிருந்தும், பயில அழைப்புப் பெற்ற இவர் காரைக்குடி அழகப்பா பொறியியற்கல்லூரியில் இப்போது B.E. பயின்று வருகிறார். இளையாத்தக்குடி பட்டினசாமி வகுப்பைச் சேர்ந்தவர் இவர்.

பாராட்டுகிறோம்

படத்தில் காணும் செல்வி ஏ. ஞானம்பாள் தேவகோட்டையைச் சேர்ந்த திரு. ஏ. சு. ஏகப்பனின் புதல்வியாவார். இவர் தேவகோட்டை ஸ்ரீ சேவுகன் அண்ணாமலைக் கல்லூரியில் B. Sc (Maths) பயின்று 1988-89 ஆம் ஆண்டில் நடைபெற்ற தேர்வில் 97 சதவிகிதம் மதிப்பெண்கள் பெற்று மதுரைக் காமராசர் பல்



கலைக் கழகத்தில் முதல் தர மாணவியாகத் தேர்ச்சி பெற்றுள்ளார். அதற்காக அவரைப் பாராட்டுகிறோம். இளையாத்தக்குடிக் கோவில் பெருமருதூர் பிரிவைச் சேர்ந்த செல்வி ஞானம்பாள் இப்போது காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழகத்தில் M. Sc (Maths) பயின்று வருகிறார்.

பாண்டிச்சேரி நகரத்தார் சங்கத்தின் ஆண்டு விழா

பாண்டிச்சேரி நகரத்தார் சங்கத்தின் ஏழாம் ஆண்டு விழா 15-10-89 அன்று ரோஸ்மா கல்யாண மண்டபத்தில் நடைபெற்றது. விழாவிற்கு சங்கத்தின் தலைவர் திரு. ஏ. முருகப்பசெட்டியார் தலைமை தாங்கினர். செயலாளர் திரு. ஏஎன். பழநியப்பன் வரவேற்றார். திரு. ந. எழிலரசன் அறிமுகம் செய்தார். பொருளாளர் திரு. ஆர்எம். ஏஆர். ஏ. சிடி. அருணசலம் ஆண்டறிக்கை வாசித்தார்.

சென்னை நகரத்தார் சங்கத் தலைவர் திரு. எஸ். ஆர்எம். பி எல். சுப்பிரமணியன் செட்டியார் விழாவினைத் தொடக்கி வைத்தார். மதுரை வங்கி தலைமைப் பொது மேலாளர் திரு. எஸ்பி. சபாபதி சிறப்புரையாற்றினர். அவர் பேசும்போது தன்னல் இயன்ற அளவு நகரத்தார்களுக்கு உதவி செய்வதாக உறுதியளித்தார். தொழில் அதிபர் பாலிமர் திரு. சுப. சிங்காரம் பேசும் போது தொழில் செய்ய முன் வரும் நகரத்தார் இளைஞர்களுக்குப் பாண்டிச்சேரி நகரத்தார் சங்கத்தின் மூலம் ஓரளவு குறைந்த வட்டியில் கடன் தொகை அளிப்பதாகவும், மேலும் தொழில் வளர்ச்சிக்கு எல்லாவிதமான ஒத்துழைப்பையும் தருவதாகவும் கூறினர். (அதற்காக திருவாளர்கள் ந. எழிலரசன், மு. பழனியப்பன், இராம. அண்ணாமலை ஆகியோரைக் கொண்ட செயற்குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது)

நூல் வெளியீடு

திரு. மு. பழனியப்பன் எழுதிய ''வாழ்க்கை உங்கள் கைகளிலே'' என்ற நூலை பேராசிரியர் திரு. ச. மெய்யப்பன் வெளியிட மதுரை வங்கியின் உயர் அதிகாரி திரு. எம். உடையப்பன் பெற்றுக் கொண்டார். திரு. மு. பழனியப்பன் நன்றி கூறினர்.

நடனம்

கீழச்சிவல்பட்டி செல்வி எஸ். சுபாவின் நடனம் துணைத்தலைவர் திரு. கேஆர். பெருமாள் செட்டியார் தலைமையில் நடைபெற்றது.

வழக்காடு மன்றம்

''கவியரசர் கண்ணதாசன் பாடல்களில் காதல் உணர்வே அதிகம் என்பது குற்றம்'' என்ற தலைப்பில் வழக்காடு மன்றம் நடைபெற்றது. திரைப்படத் தயாரிப்பாளர் திரு. பழ. கருப்பையா நடுவர் பொறுப்பேற்றார். பேராசிரியர் திரு. சுப. கதிரேசன் வழக்குத் தொடுக்க காரைக்கால் அரசினர் கல்லூரிப் பேராசிரியர் டாக்டர் நாகப்பா நாச்சியப்பன் எதிர் வழக்காடினர். நடுவர் தமது தீர்ப்புரையில் ''குற்றம்'' என்றே கூறினர்.

செயலாளர் திரு. ஏவி. கே. எம். திருநாவுக்கரசு நன்றி கூறினர்.

விழாவிற்கு வந்திருந்த நகரத்தார் பெருமக்கள் அனைவருக்கும் மாலைப் பலகாரமும், இரவு விருந்தும் அளிக்கப்பட்டன.

திருமணம்

நாட்டரசன்கோட்டை திரு. கண. ராக்கப்ப செட்டியாரின் புதல்வன் செல்வன் கண்ணப்பன் என்ற பிரபாகரனுக்கும் நாட்டரசன்கோட்டை திரு. அரு. கண. ச. சுப்பையா செட்டியாரின் புதல்வி செல்வி பூங்கோதை B. Sc. B. Lib க்கும் 3-11-89 அன்று நாட்டரசன்கோட்டையில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

ஆடிட்டர் சுப. சித. பழநியப்ப செட்டியார்

திரு. சுப. சித. பழநியப்ப செட்டியார் காரைக்குடியைச் சேர்ந்தவர். சென்னையில் கடந்த 34 ஆண்டுகளாக ஆடிட்டராகச் செயலாற்றி வருகிறார். நகரத்தார் இனத்தில் உருவான ஆடிட்டர்கள் வரிசையில் இவர் மூன்றாவர். (முதல் ஆடிட்டர் குளிபிறை திரு. பெரி. தியாகராஜ்; இரண்டாவது ஆடிட்டர் நாட்டரசன் கோட்டை திரு. சத்தியமூர்த்தி)

இவருடைய தந்தையார் திரு. சுப. சிதம்பரம் செட்டியார் காரைக்குடி பாங்கிங் கார்ப்பரேஷனின் நிறுவனராகவும் நிர்வாக இயக்குநராகவும் இருந்தவர். வள்ளல் அழகப்பர், திரு. சிதம்பரம் செட்டியாரின் சிறிய தாயார் மகனுவார். திரு. சிதம்பரம் செட்டியார் காரைக்குடியில் 'ஷேர்' வணிகம் செய்த வகையில் வள்ளல் அழகப்பர், கருமுத்து தியாகராசர், கண்டரமாணிக்கம் செ. சி. நா. லெ. ஆகியோர் அவருக்கு நண்பரானுர்கள்.

வள்ளல்- டாக்டர் அழகப்ப செட்டியார் அவர்களின் பரிந்துரையின் பேரில் திரு. பழநியப்ப செட்டியார் சென்னை பச்சையப்பன் கல்லூரியிலும், காரைக்குடி அழகப்பா கல்லூரியிலும் பயின்று B Com. தேர்ச்சி பெற்றார். பின் சென்னை ஆடிட்டர் திரு. எம். கே. தண்டேகரிடம் பயிற்சி பெற்று C. A தேர்ச்சி பெற்றார்.

இவர் இப்போது தமிழ்நாடு டூரிசம் டெவலப்மெண்ட் கார்ப்ரேஷன், டிரான்போர்ட் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன், செட்டிநாடு சிமெண்ட் மற்றும் 7, 8 நிறுவனங்களின் ஆடிட்டராக இருக்கிறார். வரி விதிப்புக்கான கோப்புகளை அதிகம் பார்த்து வருகிறார்.

இவரது துணைவியார் திருமதி விசாலாட்சி ஆச்சி நேமத்தான் பட்டியில் பிறந்தவர். (மூவார் பழநியப்ப செட்டியார அவர்களின் பேத்தி) இவர்களது 60 ஆம் ஆண்டு நிறைவு மணி விழா இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு காசியில் நடைபெற்றது.

திரு. பழநியப்ப செட்டியாருக்கு விசாலாட்சி, கல்யாணி, சிவகாமி என மூன்று புதல்விகள்; சுப்பிரமணியன் என ஒரு புதல்வர். அனைவருக்கும் திருமணம் முடிந்து விட்டது.

இவரது மூத்த மாப்பிள்ளை திரு. எம். மெய்யப்பன் M. Sc. (Zoology) ஓசூரில் தொழில் செய்கிறார். அடுத்த மாப்பிள்ளை திரு. வயி. இராமநாதன் B ComF.C.A. சென்னையில் தனியாக ஆடிட்ட



ருக்குப் பயிற்சி பெறுகிறார். இன்னொரு மாப்பிள்ளையான திரு. ஏ. சுப்பிரமணியம் B. Com F. C. A. இவருடைய ஆடிட் அலுவலகத்தில் பங்குதாரராக இருந்து செயலாற்றி வருகிறார். புதல்வன் திரு. பழ. சுப்பிரமணியன் சென்னையில் ஒரு தொழிற்சாலை -யை நடத்தி வருகிறார். திரு. பழநியப்ப செட்டியாரின் மருமகள் திருமதி லதா சுப்பிரமணியன், B. A. (Economics) படித்தவர். அவருக்குப் பயிற்சிகொடுத்து ஆடிட்டராக்க முயற்சி எடுத்து வருகிறார்கள்,

தாம் இதுவரை 5 பெண்கள்

உட்பட 100 பேருக்குப் பயிற்சி கொடுத்து அவர்களை ஆடிட்டர் களாக உருவாக்கியிருப்பதாக வும் அவர்களில் 60 பேர் நம் மவர்கள் என்றும் திரு. பழநி யப்ப செட்டியார் கூறினர். தம் மிடமும் தனது மாப்பிள்ளையிட மும் இப்போது 18 பேர் ஆடிட்ட ருக்குப் பயிற்சி பெற்று வருவ தாகவும் ஆடிட் பயிற்சி பெற நகரத்தார் பையன்கள் முன் வந் தால் அவர்களுக்குத் தாம் முன் னுரிமை கொடுப்பதாகவும் அவர் கூறினர்.

திரு. பழநியப்ப செட்டியார் சென்னை மெட்ரோ சுழற்குழுவில் 1984 ஆம் ஆண்டு தலைவராகவும் சுழற்குழு 323 மாவட்ட பொது உறவுப் பிரிவில் தலைவராகவும் தொண்டாற்றியவர்.

பேட்டியின் கடைசியில் அவர் சொன்னர்: ''நான் 34 ஆண்டு களாக ஆடிட்டராக இருக்கி றேன். நம்மினத்தவர்களின் ஃபைல்கள் என்னிடம் அதிகம் வருவதில்லை.''

நேர்முகம்: எல். சுந்தரம்.

திருமணம்

ஒக்கூர் சி. கரு. சிந. கரு. சிந்தாமணி செட்டியார் அவர் கள் புதல்வி செல்வி கண்ணத் தாள் B A க்கும் மதகுபட்டி சொக்கலிங்கபுரம் சுப லெ. ராம. இராமநாதன் செட்டியார் அவர் கள் புதல்வன் செல்வன் முருகப் பன் B E. க்கும் 15-11-89 அன்று ஒக்கூரில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.



அரிமளம் -சிங்கப்பூர் கெத்தே அ. சா. அண்ணுமலை செட்டியார் அவர்கள் புதல்வன் செல்வன் மணி வண்ணனுக்கும் நடராஜபுரம் டாக்டர் லெ சிவராமன் செட்டியார் அவர்கள் புதல்வி செல்வி ராஜலெட்சுமிக்கும் 18-10-89 அன்று நடராஜபுரத்தில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

திருவனந்தபுரம் சங்கத்தில் ஆண்டு விழா

திருவனந்தபுரம் நகரத்தார் சங்கத்தின் முதலாம் ஆண்டு நிறைவு விழா 12-11-89 ஞாயிறு அன்று திருவனந்தபுரம் கிள்ளிப் பாலத்தில் உள்ள தமிழ்ச் சங்கக் கட்டிடத்தில் சிறப்பாக நடை பெற்றது. சங்கத் தலைவர் திரு. எஸ் எம். செல்லப்ப செட்டியார் தலைமை வகித்து வரவேற்புரை வழங்கினார். தொடர்ந்து சங்கச் செயலாளர் திரு. எஸ். கணபதி ஆண்டறிக்கையும், பொருளாளர் திரு. என். வள்ளியப்பன் கணக்கறிக்கையும் வாசித்தார்கள். முதலாண்டில் சங்கம் ஆற்றிய செயல்களையும், நடத்திய நிகழ்ச்சிகளையும் சுருக்கமாக திரு. கணபதி வாசித்தார். திருநெல்வேலி நகரத்தார் சங்க கௌரவ ஆலோசகரும், அரிமா சங்கத்தின் மாவட்டத் தலைவருமான திரு. பிஎல். முருகப்பன் உரையாற்றிய போது திருவனந்தபுரம் நகரத்தார் சங்கத்தின் வளர்ச்சியைப் பாராட்டிப் பேசினார் தொடர்ந்து திருவனந்தபுரம் சங்கத்தின் துணைத் தலைவர் திரு. எம். அழகப்பன் திருநெல்வேலி நகரத்தார் சங்கத்தின் துணைத் தலைவர் திரு. எஸ். சொக்கலிங்கம், திருநெல்வேலி நகரத்தார் சங்கச் செயலாளர் திரு. சி. கல்யாணகிருஷ்ணன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

''இச்சங்கம் நிதியைப் பெருக்கி நம் இனத்தில் நலிந்தவர்கள் திருமணங்களுக்கு உதவ வேண்டும்'' என்று திரு. சொக்கலிங்கம் ஆலோசனை கூறினார். திரு. கல்யாணகிருஷ்ணன் நகரத்தார் சமூகத்தின் பலங்களைப் பற்றியும் பலவீனங்களைப் பற்றியும் பேசி பலவீனங்களை அகற்றும் முறைகளைப் பற்றிக் குறிப்பிட்டார்.

திருநெல்வேலி நகரத்தார்



திருவனந்தபுரம் நகரத்தார் சங்கத்தின் முதலாம்ஆண்டு நிறைவு விழாவில் பொருளாளர் திரு. என். வள்ளியப்பன் கணக்கு அறிக்கை வாசிக்கிறார். அருகே திருவாளர்கள் எஸ். கணபதி, சி. கல்யாண கிருஷ்ணன், பீஎல். முருகப்பன், எஸ். எம். செல்லப்ப செட்டியார் (தலைவர்) எஸ். சொக்கலிங்கம், எம். அழகப்பன்.

சங்கத்தைத் தோற்றுவித்த திரு. எஸ்எம். நடராஜன் செட்டியார், எர்ணுகுளம் முத்தமிழ்ச் சங்கத்தின் செயலாளர் திரு. ஏ. எஸ். சிவப்பிரகாசம் ''நகரத்தார் குரல்'' துணை ஆசிரியர் திரு. எல். சுந்தரம் ஆகியோர் அனுப்பியிருந்த வாழ்த்துச் செய்திகளை செயலாளர் திரு. எஸ். கணபதி வாசித்தார்.

குழந்தைகள் பங்கு பெற்ற பேச்சுப் போட்டி, மாற்றுடைப் போட்டி நடைபெற்றது. வெற்றி பெற்றவர்களுக்குத் தலைவர் பரிசுகள் வழங்கினர்.

பட்டிமன்றம்

தேவகோட்டை கந்தர் சஷ்டி விழாவின் 44 ஆம் ஆண்டு நிகழ்ச்சிகள் 29-10-89 முதல் 6-11-89 வரை சிறப்பாக நடந்தன. 4-11-89 காலை 10-00மணி -க்கு பட்டி மண்டபம் நடைபெற்றது. 'பக்தி உணர்வை மிகுதியும் தூண்டும் காப்பியம் இராமாயணமே, பாரதமே, பெரிய புராணமே' என்ற தலைப்பில் நடைபெற்ற அதற்கு பேராசிரியர் திரு. கண. சிற்பேசன் நடுவர் பொறுப்பேற்றார் 'இராமாயணமே' என்ற அணியில் புலவர் மாமணி மா. முத்துராமன் புனிதா ஏகாம்பரம் டாக்டர் கரு. முத்தையாவும் 'பாரதமே' என்ற அணியில் எல். கே. சுபாஷ் சந்திரபோஸ் ஆ. இலக்குமி சேது. அருணசலமும் 'பெரிய புராணமே' என்ற அணியில் டாக்டர் பழ, முத்தப்பன் அலமேலு முகுந்தன் டாக்டர் சபா. அருணசலமும் வாதிட்டனர்.

காலையில் நோக்கர்களால் பாரதம் நீக்கப்பட்டது. மாலையில் இரு அணியும் மோத நடுவர் 'பெரிய புராணமே' என்று தீர்ப்பு அளித்தார். இந்தப் பட்டிமண்டப நிகழ்ச்சியை மதுரை அகில இந்திய வானொலி-நிலையம் ஒலிப்பதிவு செய்தது.



உள்ளம் குளிர வந்த உத்தமனே...

பா. ராமகிரி, தேவகோட்டை

ஆராரோ ஆராரோ ஆரிரரோ ஆராரோ
கண்ணே உறங்கு கண்மணியே நீ உறங்கு
பொன்னே உறங்கு புதுமலரே நீ உறங்கு
மயிலே உறங்கு மரகதமே நீ உறங்கு
உள்ளம் குளிர வந்த உத்தமனே நீ உறங்கு

அழுகாதே அழுகாதே ஐயாவே அழுகாதே
ஆரடிச்சா ஏன் அழுதாய் அடிச்சாசைச் சொல்லி அழு
ஐயா அடிச்சாரோ அரவணைக்கும் கையாலே
ஆயா அடிச்சாளோ அன்னமிடும் கையாலே
மாமன் அடிச்சானோ மாலையிடும் கையாலே
அத்தை அடித்தாளோ அமுதூட்டும் கையாலே

வைகை பெருகிவர வார்த்த மணல் ஊர்த்து வர
ஊர்த்து வந்த கங்கையிலே ஒட்டி வந்த கட்டிமுத்தோ
தேனால் அபிஷேகம் சிறுதேங்காய் பன்னீராம்
பாலால் அபிஷேகம் பண்ணுவார் பேரனே

குங்குமத்தால் அபிஷேகம் செய்திடுவார் பேரனே
நந்தவனம் போய் நாலுவகைப் பூ எடுத்து
பூ எடுத்து பூசை செய்யும் புண்ணியவார் பேரனே
மலரெடுத்துப் பூசை செய்யும் மகராசா பேரனே

அரும்பெடுத்துப் பூசை செய்யும் அர்சுனவார் பேரனே
தங்கத்தால் தொட்டிலாம் தங்கமகன் நித்திரைக்கு
வெள்ளியால் தொட்டிலாம் வீரமகன் நித்திரைக்கு
சந்தனத்தால் தொட்டிலாம் செல்லமகன் நித்திரைக்கு

சின்னஞ்சிறு மலரே செல்லமே நீ தூங்கு
சின்ன விழிப்பூவே சின்னவனே நீ தூங்கு
சித்திரப் பூங்காற்றே அன்னமே நீ தூங்கு
நிலவே மலரே சொர்ணமே நீ தூங்கு

உயிரே உறவே உத்தமனே நீ தூங்கு
எங்கள் குலம் செழிக்க வந்த மன்னவனே நீ தூங்கு
ஆராரோ ஆராரோ ஆரிரரோ ஆராரோ
ஆராரோ ஆராரோ ஆரிரரோ ஆராரோ

பழநியப்பர் பணி வாழ்க!

'காசிஸ்ரீ' அரு. சோமசுந்தரன் M. A., B. T.,

எண்ணிறந்த காலங்கள் இருப்பீர் என்றே
இறுமாந்தே இருந்திட்டோம்; ஆனல் அந்தோ!
புண்ணிறைந்த உடம்பிதுவே என்று சொல்லிப்
புறப்பட்டுப் போய்விட்டீர் பழநி யப்ப!
கண்ணியவான் நீங்கள்தான் பழநி வாழும்
கடவுளுக்குத் தொண்டன் நீர்! நடந்து செல்லும்
புண்ணியவான் அனைவர்க்கும் நீறு பூசிப்
புனிதம்செய் குருவாகிப் புகழைப் பெற்றீர்!

எளிமையுடன் வாழுதற்குக் கற்றுக் கொண்டீர்
இதயத்தைப் பக்தியினுல் நிறைத்துக் கொண்டீர்
வழிதெரியா மக்கட்கு வாழ்த்துக் கூறி
வாஞ்சையுடன் பழகுதற்கு வரங்கள் பெற்றீர்!
துளிகூட விலகாமல் தொண்டு செய்யும்
தொல்மரபைப் பின்பற்றும் துணிவு பெற்றீர்!
விழியில்லா எமன்வந்தே அழைத்த காலே
விரைந்து செல ஏன்கற்றீர் பழநி யப்ப?

முருகன்அவன் பேர்இருக்கும் காலம் மட்டும்
முத்தமிழின் ஒலியிங்கே உலவு மட்டும்
திருநீற்றைப் பூசிடுவோர் வாழு மட்டும்
திருவடியால் நடப்போர்கள் உள்ள மட்டும்
பெருமகனும் பழநியப்பர் பேர் இருக்கும்
பீடுமிகு குட்டையய்யா நாமம் போற்றி
அரும்பணிகள் செய்திட்ட பழநி யப்பர்
அடியிணைகள் போற்றிடுவோம் அஞ்சலிப்போம்!

காரைக்குடியில் இரங்கல் கூட்டம்

அருளாடியார் திரு. பழநியப்ப செட்டியார் அவர்களின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்துத் தேவகோட்டை திருச்செந்தூர்ப் பாதயாத்திரைக் குழுவின் சார்பில் 11-11-89 மாலே காரைக்குடியில் 'காசிஸ்ரீ' திரு. அரு. சோமசுந்தரன் இல்லத்தில் கூட்டம் நடை பெற்றது. காசிஸ்ரீ அரு. சோமசுந்தரன், திருத்தொண்டர் வயிரவன், இசைத் தொண்டர் காசிநாதன் இசைத் தொண்டர் இராமலெட்சுமணன், நாச்சியப்பன் ஆகியோர் இரங்கல் உரை நிகழ்த்தினர். அமரர் பழநியப்ப செட்டியாரின் உருவப்படத்திற்குப் பூப் போட்டு வணங்கிச் சிவபுராணம் படித்தனர். இரங்கல் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

இயற்கை எய்தினுர்

பள்ளத்தூர் அ. மு. ராம. முரு. சீனிவாசன் செட்டியார் அவர்களின் துணைவியார் திருமதி மீனுட்சி ஆச்சி அவர்கள் தமது 61 ஆவது வயதில் 4-11-89 அன்று சென்னையில் இயற்கை எய்தினுர்கள்.

உ

சிவமயம்

இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் :

23-8-1929

மறைவு :

19-12-1987

நாட்டரசன்கோட்டை

வீர. ஆ. ராம. வேங்கடாசலம் செட்டியார்

(முன்னாள் அலுவலகக் கண்காணிப்பாளர்
சரசுவதி நாராயணன் கல்லூரி, மதுரை-22)

என்றும் எங்கள் உள்ளத்தில் நீங்கா இடம் பெற்று நிலைத்து நிற்கும் எங்கள் இதய தெய்வத்திற்கு அஞ்சலி செலுத்துகிறோம்.

நெஞ்சிருக்கும் வரை நினைவிருக்கும்

ராம. வெ. சொர்ணவல்லி ஆச்சி - மனைவி

மகன்கள் :

வெ. இராமசாமி — கண்ணாத்தாள் இராமசாமி
வெ. கண்ணப்பன் — உமையாள் கண்ணப்பன்
வெ. முருகப்பன் — புவனேஸ்வரி முருகப்பன்
வெ. மாணிக்கவாசகம் — நாச்சம்மை மாணிக்கவாசகம்
வெ. சோமசுந்தரம் — மீனாட்சி சோமசுந்தரம்

மற்றும் பேரன் பேத்திகள்

"ஸ்ரீ வேங்கட இல்லம்"
2/195-B, பெருங்குடி.
மதுரை-625 022

அருளாடியார் பழநியப்ப செட்டியார் இயற்கை எய்தினர்

'பழநிக் கோயில் அருளாடியார்' என்கிற கண்டனூர் சாமியாடிச் செட்டியாரான கு. ப. சுப. சு. சுப. பழநியப்ப செட்டியார் அவர்கள் தமது 59ஆவது வயதில் 7–11–89 காலை 10மணி அளவில் சிவபதவி அடைந்தார்கள். மறுநாள் கண்டனூரில் தகனக்கிரியை



நடைபெற்றது. ஏராளமான முருகபக்தர்கள் கிரியை நிகழ்ச்சிகளில் பங்கு பெற்றனர். பழநித் தைப் பூசத்துக்கு ஏராளமான காவடிகள் தாங்கி எல்லையற்ற பக்தர்கள் நடந்த பொற்காலத்தைக் கண்ட அருளாடியார் பழநியப்ப செட்டியார் அவர்களின் ஆன்மா சாந்தியடைய இறையருளை இறைஞ்சுகிறோம்.

கண்டனூரில் இரங்கல் கூட்டம்

பழநிக்கோயில் அருளாடியார் என்ற பழநியப்ப செட்டியார் அவர்களின் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கும் கூட்டம் 13-11-89 அன்று கண்டனூரில் நடைபெற்றது. திரு.லெ. இராமநாதன், பேராசிரியர் அர. சிங்காரவடிவேலன், 'காசிஸ்ரீ' அரு. சோமசுந்தரன், புலவர் இராம. வீரப்பன், கண்டனூர் ஊராட்சி மன்றத் தலைவர் வயி. சிதம்பரம் செட்டியார் ஆகியோர் இரங்கல் உரை ஆற்றினர்.

இயற்கை எய்தினர்

மேலைச் சிவபுரி ஆ. ராம. மீனாட்சி ஆச்சி அவர்கள் தமது 80 ஆவது வயதில் 15-10-89 அன்று இயற்கை எய்தினர்கள்.

கீழச்சிவல்பட்டியில் குழந்தைகளின் கலை நிகழ்ச்சிகள்

நேரு நூற்றாண்டு மற்றும் குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்களின் 67 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு 7-11-89 அன்று கீழச்சிவல்பட்டி ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரர் மேல்நிலைப் பள்ளியில் குழந்தைகளின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

விழாவிற்கு மேற்படி பள்ளித் தலைமை ஆசிரியர் திரு. லெ. கண்ணப்பன் முன்னிலை வகிக்க திருமதி தேவி நாச்சியப்பன் வரவேற்புரை நிகழ்த்தினர். குழந்தைக் கவிஞர் இயற்றிய பல பாடல்களை 3 வயது முதல் 16 வயது வரையிலான குழந்தைகள் பாடி நடித்தனர்.

குழந்தைக் கவிஞரின் 'வீண் பெருமை வேதனை' எனும் நாடகமும் 'பலகாரத்தில் சிறந்தது இட்லியா? தோசையா?' எனும் தலைப்பில் பட்டி மன்றமும் நடைபெற்றன.

திருவாளர்கள் அய்க்கண், ஜோசப், கன்னையா ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். விழாவில் பங்கு கொண்டவர்களுக்கு திரு. வ. தேனப்ப செட்டியார் பரிசுகளை வழங்கினர்.

பாராட்டுகிறோம்

படத்தில் காணும் செல்வி சுபா, கீழச்சிவல்பட்டி திரு. எஸ்பி. சிங்காரம்-திருமதி வாசுகி ஆச்சியின் புதல்வியாவார்.

செல்வி சுபா சென்னையில் உள்ள தஞ்சாவூர் விஜயலெட்சுமியிடம் கடந்த இரண்டு ஆண்டு



களாக நடனம் கற்று வருகிறார். இவர் பரதம், குஜராத்தி, ஆங்கில நடனங்களைத் திறமையோடும் பாவங்களோடும் ஆடி வருகிறார். முறைப்படியான நடன அரங்கேற்றம் இனிமேல்தான் நடைபெற வேண்டும்.

இவர் சென்னை நுங்கம்பாக்கம் அகத்தீஸ்வரர் ஆலயம், ஆ. தெக்கூரில் ஒரு திருமண நிகழ்ச்சி, பாண்டிச்சேரி நகரத்தார் சங்கத்தின் ஆண்டு விழா போன்றவற்றில் நடனமாடியுள்ளார்.

10 வயதுடைய செல்வி சுபா சென்னை பத்மா சேஷாத்திரி பள்ளியில் ஐந்தாம் வகுப்பில் கல்வி கற்று வருகிறார். தன் அக்காள் லதாவைப்போல இவரும் படிப்பில் படுசுட்டி.

கல்வியில் சிறந்து விளங்கி வாழ்வில் உயர்வதும் நடனக் கலையில் நல்ல தேர்ச்சி பெற்று அக்கலையைப் பொழுது போக்காகக் கொள்வதுமே தன் விருப்பம் என்கிறார் செல்வி சுபா.

திருமணம்

பள்ளத்தூர் முன்னேறப் பாடுபடும் இளைஞர் செல்வன் அண. விஸ்வநாதனுக்கும், அரண்மனை சிறுவயல் திரு. மாணிக்கம் செட்டியார் புதல்வி செல்வி அன்னபூரணிக்கும் 10-11-89 அன்று அரண்மனை சிறுவயலில் திருமணம் சிறப்பாக நிகழ்ந்தது. அவ்வமயம் நிகழ்ந்த வாழ்த்தரங்கிற்கு ஜவஹர் மில்ஸ் நிர்வாக இயக்குநர் திரு. விவேகானந்தன் தலைமை தாங்க திரு. இராம. ஏகப்பன், திரு. அரு. சோமசுந்தரன், திரு சொ. சொ மீ சுந்தரம் வாழ்த்துரை வழங்கினர்.

SUBAM
TRAVEL AGENCY

சுபம்

டிராவல்ஸ் ஏஜன்ஸி

226, நாயக்கர் புதுத்தெரு, மதுரை-1. ☎ 22712

சபரிமலைப் பயணம்

3 நாட்கள் பிரயாணம்: மதுரை - குற்றாலம் - ஆரியங்காவு - பந்தளம் - ஆரன்முலா - எருமேலி (தங்கல்) - பம்பை - சன்னிதானம் (தங்கல்) - செங்கோட்டை - மதுரை.

7-12-89 To 9-12-89
10-12-89 To 12-12-89
14-12-89 To 16-12-89
17-12-89 To 19-12-89
21-12-89 To 23-12-89
24-12-89 To 26-12-89
1-1-90 To 3-1-90
5-1-90 To 7-1-90
17-1-90 To 19-1-90

மேற்கண்ட 3 நாட்கள் பயணத்திற்கு: பஸ் கட்டணம், தங்கும்வசதி, காலை டிபன் காபி, பகல் சாப்பாடு, மாலை ஸ்வீட், காரம், காபி, இரவு ஆகாரம் உள்பட ஒரு சாமிக்கு ரூ. **220**

அரைக் கட்டணம்: 3 வயது முதல் 8 வயதிற்குள் ரூ. **175**

4 நாட்கள் பிரயாணத்திற்கு : மதுரை - பழனி or திருமூர்த்திமலை குருவாயூர் (தங்கல்) - திருப்பரையாறு - கொடுங்களூர் - காலடி - சோட்டாணிக்கரை - வைக்கம் - எட்டுமானூர் - எருமேலி (தங்கல்) - பம்பை - சன்னிதானம் (தங்கல்) - செங்கோட்டை - மதுரை.

17-12-89 To 20-12-89
31-12-89 To 3-1-90
5-1-90 To 8-1-90

மேற்கண்ட 4 நாள் பிரயாணத்திற்கு : பஸ் கட்டணம் 4 வேளை ஆகாரம், தங்கும் வசதியுள்பட ஒருசாமிக்கு ரூ. **290**

அரைக் கட்டணம் : 3 முதல் 8 வயதிற்குள் ரூ. **240**

4 நாட்கள் பிரயாணம் : மதுரை - குற்றாலம் - ஆரியங்காவு - குளத்துப்புழை - ஒச்சிரை (மஹாதேவர்) - ஹரிப்பாடு (சுப்பிரமணியர்) - அம்பலப்புழை (கண்ணன்) (தங்கல்) - திருவல்லா (விஷ்ணு) - திருவண்வண்டூர் (கோசால கிருஷ்ணர்) - செங்கண்ணூர் (பகவதி) - ஆரண்முலா (கிருஷ்ணர்) எருமேலி (தங்கல்) - பம்பை - சன்னிதானம் (தங்கல்) - செங்கோட்டை - மதுரை.

14—12—89 To 17—12—89

நாள் 4க்கு பஸ் கட்டணம் சாப்பாடு உள்பட ஒரு சாமிக்கு ரூ. **290**

அரைக் கட்டணம் ரூ. **240**

4 நாட்கள் பிரயாணம்: மதுரை - திருச்செந்தூர் - கன்னியாகுமரி

சுசீந்திரம் - திருவனந்தபுரம் (தங்கல்) - வர்க்கலா - பந்தளம் - ஆரண்முலா - எருமேலி (தங்கல்) - பம்பை - சன்னிதானம் (தங்கல்) செங்கோட்டை - மதுரை.

23—12—89 To 26—12—89

நாள் 4க்கு பஸ் கட்டணம் சாப்பாடு தங்கும் சிலவு உள்பட
ஒரு சாமிக்கு ரூ. **290.** அரைக் கட்டணம் ரூ. **240**

6 நாட்கள் ஸ்ரீ முகாம்பிகை—ஐயப்பன் தெரிசனம்

29—12—89 To 3—1—90

மதுரை - பன்னாரி - மைசூர் - சுப்பிரமண்யா - தர்மஸ்தலம் - உடுப்பி மூகாம்பிகை - குருவாயூர் - திருப்பரயாறு - கொடுங்களூர் - காலடி- சோட்டாணிக்கரை - எருமேலி - பம்பை - சன்னிதானம் - செங் கோட்டை -மதுரை.

நாள் 6க்கு பஸ் கட்டணம், சாப்பாடு தங்கும் சிலவு உள்பட
ஒரு சாமிக்கு ரூ. **420.** அரைக்கட்டணம் ரூ. **330**

4 நாட்கள் பெரியபாதைப் பயணம்

5—1—90 To 8—1—90

மதுரை - குற்றாலம் - ஆரியங்காவு - எருமேலி - பெரிய பாதையில் கரிவலம்தோடு (தங்கல்) - பம்பை - சன்னிதானம் (தங்கல்) - செங் கோட்டை - மதுரை.

நாள் 4க்கு பஸ் கட்டணம் சாப்பாடு உள்பட ஒரு சாமிக்கு ரூ **300**
அரைக் கட்டணம் ரூ. **240**

6 நாட்கள் மகரஜோதி - பெரியபாதைப் பயணம்

11—1—90 To 16—1—90

மதுரை - குற்றாலம் - ஆரியங்காவு -ஒச்சிரை (மஹாதேவர்) - ஹரிப் பாடு - (சுப்பிரமணியர்) - அம்பலப்புழை (கண்ணன்) (தங்கல்) - திருவல்லா (விஷ்ணு) - திருவண்வண்டூர் - (கோகுலகிருஷ்ணர்) - செங்கண்ணூர் (பகவதி) - ஆரன்முலா (கிருஷ்ணர்) - எருமேலி (தங்கல்) - பெருவழிப் பாதையில் முக்குழி (தங்கல்) - பம்பை அடைந்து ஜோதி பார்த்தல் (தங்கல்) - சன்னிதானம் (தங்கல்) செங்கோட்டை - மதுரை.

நாள் 6க்கு பஸ் கட்டணம், 4வேளை ஆகாரம், தங்கும் வசதி உள்பட
ஒரு சாமிக்கு ரூ. **420.** அரைக் கட்டணம் ரூ. **330**

2 நாட்கள் சபரிமலைப் பயணம்

9—1—90 To 10—1—90

மதுரை - குமுளி - எருமேலி - பம்பை - சன்னிதானம் (தங்கல்) செங்கோட்டை - மதுரை.

நாள் 2க்கு பஸ் கட்டணம், 4 வேளை ஆகாரம், உள்பட
ஒரு சாமிக்கு ரூ. **150.** அரைக் கட்டணம் ரூ. **120**

அண்ணாமலைப் பல்கலையின் வைர விழா!

சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் தனது வைர விழாவை டிசம்பரில் மிகப்பெரிய அளவில் கொண்டாட இருக்கிறது.

14-12-89 அன்று தொடங்கும் வைர விழாவை இந்தியக் குடியரசுத் தலைவர் மேதகு ஆர். வெங்கட்ராமன் அவர்கள் தொடங்கி வைப்பதாகவும் தமிழக முதல்வர் மாண்புமிகு மு. கருணாநிதி அவர்கள் வைர விழா உரை நிகழ்த்துவதாகவும் விழாவிற்குத் தமிழகக் கல்வி அமைச்சர் மாண்புமிகு க. அன்பழகன் அவர்கள் தலைமை வகிப்பார்கள் என்றும் விழாவில் தமிழக முதல்வர் திரு. மு. கருணாநிதி தமிழில் எழுதியுள்ள ''குறளோவியம்'' மொழி பெயர்ப்பு வெளியிடப்படுமென்றும் இந்தியன் வங்கியின் நிதி உதவி மூலம் ரூ. 3 இலட்சம் செலவில் ஊரக வளர்ச்சி மையம் ஒன்று தொடங்கப்படுமென்றும் மேற்படி பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் ஆர்எம். சேதுநாராயணன் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்கள்.

தேவகோட்டையில் பட்டிமண்டபம்

தேவகோட்டை வெள்ளையன் ஊரணி-அருள்மிகு கோதண்டராமஸ்வாமி பெருமாள் கோவில் அருள்மிகு ஆஞ்சநேய மூர்த்தி விமான கோபுர மஹா ஸம்ரோக்ஷணத்தை முன்னிட்டு 1-11-89 அன்று இரவு ''இராம பக்திபால் சிறந்தவர் அனுமனா இலக்குவனா'' என்ற பொருளில் பட்டி மண்டபம் நடைபெற்றது. டாக்டர் திரு. கரு. முத்தையா நடுவராக இருக்க, 'இலக்குவனே' என்ற அணியில் டாக்டர் வ. தேனப்பன், திருமதி அலமேலு முகுந்தன், கவிஞர் வெ. பழநியப்பன் வாதிட 'அனுமனே' என்ற அணியில் டாக்டர் சபா. அருணசலம், செல்வி ஆ. ம. ஜெயலெட்சுமி, கவிஞர் சேது. அருணசலம் வாதிட நடுவர் 'அனுமனே' என்று தீர்ப்பு அளித்தார்.

கம்பம் நகரத்தார் சங்கம்

கம்பம் நகரத்தார் சங்கத்தின் சிறப்புக் கூட்டம் 2-11-89 அன்று சங்கத் தலைவர் திரு. எஸ்பி. பழநியப்பன் தலைமையில் நிகழ்ந்தது. சங்கச் செயலர் திரு. எல். கேபி. எல். சுப்பையா வரவேற்றார். சிறப்பு விருந்தினர் 'காசிஸ்ரீ' திரு. அரு. சோமசுந்தரனுக்கு திரு. முத்து கரு. முத்தையா செட்டியார் பொன்னடை போர்த்தினர்.

கூட்டத்தில் திரு. அ. ராம. சோமு, திரு. சுப. விஸ்வநாதன், திரு. சங்கு அழகர்சாமிபிள்ளை ஆகியோர் பேசினர்கள் நகரத்தார் திருப்பணிகள் பற்றி திரு. அரு. சோமசுந்தரன் உரையாற்றினர். சபரிமலையில் ஒரு நகர விடுதி கட்ட ஆவன செய்ய வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

எக்ஸ்போ பிரிண்டர்ஸ் 20, கிருஷ்ணபுரம் 4-வது குறுக்குத் தெரு மதுரை-625 009 ல் அச்சிட்டு சுப. அ. நடராசன் அவர்களால் 25, வடக்குச் சித்திரை வீதி. மதுரை-625 001 லிருந்து வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர் : வி. என். சிதம்பரம்

நகரத்தார் குரல்

நமது அடுத்த இதழில்...

முனைவர் தமிழண்ணல் அவர்கள்

எழுதும்

ஒரு தொடர் கட்டுரை,

முனைவர் சுப. அண்ணாமலை அவர்கள்

'மணிவண்ணன்' என்ற புனைப்பெயரில் எழுதும்

"மணிவண்ணன் மடல்"

என்ற கடிதத் தொடர்,

இரண்டும் தொடங்குகிறது.

மற்றும்

பாங்க் ஆப் மதுரையின் முன்னாள் தலைவர்

திரு. எல். கிருஷ்ணன் அவர்களின் பேட்டியும்

திரு. ஏஎல். எஸ். கண்ணப்பனின் பேட்டியும்

மற்றும் பயனுள்ள கட்டுரைகளும்

இடம் பெறுகின்றன.